www.padippakam.com

டிசம்பர் 2005 ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்






## விவசாயிகளைக் காவுகொள்ளும் தாராளமயக் கொள்கை!

படிப்பகம்

# அமெரிக்க எதிர்ப்பு: சி.பி.எம்.-இன் பித்தலாட்டம்

''இந்திய வான்வெளி. அமெரிக்காவின் விற்பனைக்கு அல்ல! அமெரிக்காவின் இராணுவத் தளமாக இந்தியாவை மாற்றுவதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்! கொலைகார அமெரிக்க போர் விமானப் படையுடன் நடத்தும் கூட்டுப் பயிற்சியை நிறுத்து!'' - கைகளிலே செங்கொடியும் கருப்புக் கொடியும் ஏந்தி பல்லாயிரக்கணக்கான மக்கள் கடந்த நவம்பர் 7-ஆம் நாளன்று மே.வங்கத்தின் மித்னாபூர் மாவட்டத்திலுள்ள களைகுண்டா விமானப் படைத்தளம் அருகே விண்ணதிர முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதேபோல், வடக்கே சிலிகுரி அருகிலுள்ள பக்டோக்ரா விமானப் படைத்தளம் அருகேயும், கொல்கத்தாவின் டம்டம் விமானத்தளம் அருகிலும் இந்திய - அமெரிக்க போர் விமான கூட்டுப் பயற்சியை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

வாஜ்பாய் ஆட்சியின்போதும் இதேபோல் இந்திய - அமெரிக்கப் போர் விமானங்களின் கூட்டுப் பயிற்சி நடைபெற்றது. அப்போது சி.பி.எம். தலைமையிலான 'இடதுசாரி'க் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தின. அதே கூட்டுப் பயிற்சி இப்போது சி.பி.எம். தலைமையிலான 'இடதுசாரி' கூட்டணி ஆளும் மே. வங்கத்தில் நடைபெற்றது. அதை எதிர்த்துத்தான் 'இடதுசாரி' கட்சிகள் ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளன. 'இடது' முன்னணித் தலைவர்களும், ஊழியர்களும் உழைக்கும் மக்களும் பல்லாயிரக்கணக்கில் திரண்டு நடத்திய இந்த ஆர்ப்பாட்டம் மிகப் பெரிய வெற்றி என்கிறது சி.பி.எம். கட்சி.

இச்செய்தியைப் படிக்கும் எவரும், சி.பி.எம். கட்சி அமெரிக்க எதிர்ப்பில் உறுதியாக நிற்கும் கட்சி; அமெரிக்க மேலாதிக்கத்துக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வரும் போர்க்குணமிக்க கட்சி என்றுதான் கருதுவர். ஆனால், மே.வங்கத்தை ஆளும் சி.பி.எம். முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யாவின் ஒப்புதலுடன்தான் இந்தப் போர் விமான கூட்டுப் பயிற்சியே நடந்துள்ளது.

மே.வங்கத்தில் போர் விமான கூட்டுப் பயிற்சி வேண்டாம்; வேறிடத்தில் நடத்தலாம் என்று அமெரிக்கா கூடத் தயங்கியது. இதைப் பற்றி பிரணாப் முகர்ஜியிடம் நிருபர்கள் கேட்டபோது, ''இது தொடர்பாக மே.வங்க முதல்வர் புத்ததேவிடம் பேசிவிட்டோம். அவர் கூட்டுப் பயிற்சிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று உறுதியளித்துள்ளார். அவர் எதிர்ப்பு தெரிவித்தால் வேறு மாநிலத்தில் நடத்தலாம் என்று கருதினோம். ஆனால் சி.பி.எம். முதல்வரே உறுதியளித்துள்ளதால் திட்டமிட்டபடி மே.வங்கத்திலேயே இக்கூட்டுப் பயிற்சி நடைபெறும். இடதுசாரிகள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது அவர்களது ஜனநாயக உரிமை. அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று புத்ததேவ் உறுதி கூறியுள்ளார்'' என்று விளக்கியுள்ளார், பிரணாப் முகர்ஜி.

''மைய அரசு அமெரிக்காவுக்கு விசுவாசமாக போர் விமானக் கூட்டுப் பயிற்சியை நடத்துவதென்பது அவர்களது உரிமை; எதிர்ப்பு காட்டுவதென்பது எங்களது உரிமை; அதேநேரத்தில் மைய அரசின் முடிவுக்குக் கட்டுப்பட வேண்டியது மாநில அரசின் கடமை'' என்று பித்தலாட்டம் செய்கிறது சி.பி.எம். கட்சி. மே.வங்கத்தில் இக்கூட்டுப் பயிற்சியை நடத்த அனுமதிக்க முடியாது என்று மாநில அரசின் சார்பில் எதிர்ப்பு தெரிவித்து தடுத்திருக்கலாமே என்று கேட்டால், ''அப்படிச் செய்தால் மே.வங்கத்தைப் பற்றி அந்நிய முதலீட்டாளர்களுக்குத் தவறான கருத்து ஏற்பட்டு விடும். அந்நிய முதலீடுகள் வராமல் போய்விடும்'' என்கிறார் மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வர்.

ஆர்ப்பாட்டம் நடந்த களைகுண்டா போர் விமானப் படைத்தளத்துக்கு 2 கி.மீ. தூரத்துக்கு அப்பால் போலீசு தடுப்பரண்களை நிறுவி, ஆர்ப்பாட்டக்காரர்களை தடுத்து நிறுத்தியது, ஆளும் 'இடது முன்னணி' அரசு. கேட்டால் ''சட்டம் - ஒழுங்கைக் காக்க வேண்டியது மாநில அரசின் கடமை'' என்கிறார் புத்ததேவ். வேறு மாநிலத்தில் இக்கூட்டுப் பயிற்சி நடந்திருந்தால் இப்படி மிகப்பெரிய ஆர்ப்பாட்டம் நடத்தி பரபரப்பூட்டியிருக்க முடியாது. எனவேதான், மே.வங்கத்தில் நடத்த ஒப்புதல் அளித்துவிட்டு, எதிர்ப்பும் காட்டி பித்தலாட்டம் செய்கிறது சி.பி.எம். கட்சி. பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல் புரட்சி செய்வது எப்படி? தெரியாவிட்டால் சி.பி.எம். கட்சியினரிடம் கேளுங்கள்.

● குமார்

இந்திய-அமெரிக்க இராணுவ கூட்டுப் பயிற்சியை எதிர்த்து, களைகுண்டாவில் இடது முன்னணி நடத்திய ஆர்ப்பாட்டம்: பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன்.




படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 21**

**இதழ் 2**

டிசம்பர் 2005

**உள்நாடு**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

## துயர வெள்ளத்தில் தமிழகம்

# தேவை: மறுவாழ்வு; அற்ப நிவாரணமல்ல!

சென்ற ஆண்டு சுனாமி. இந்த ஆண்டு பெருமழை - வெள்ளம். இயற்கைப் பேரிடர் - இழப்புகளுக்கு இருக்கின்ற வாழ்வும் இலக்காகி, உழைக்கும் மக்கள் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்படும் கொடுமை நம் கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தின் 15-க்கும் மேற்பட்ட மாவட்டங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டு ஒவ்வொரு நகரமும் ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு வீடும் தனித் தனி தீவுகளாக மாறி துயர வெள்ளத்தில் தத்தளிக்கிறது. தண்ணீருக்காக ஏங்கித் தவித்த தமிழகம் தண்ணீரிலேயே மூழ்கி அழிகிறது.

சென்ற மாத இறுதியில் தொடங்கிய தொடர் மழையில் சென்னை, திருச்சி முதலான நகரங்களும் காவிரிக் கரையோரப் பகுதிகளும் கடுமையாகப் பாதிக்கப் பட்டன. அந்தப் பாதிப்புகளிலிருந்து மீண்டு வருவதற்கு முன்னரே, அடுத்த மழை தமிழகத்தை வெள்ளக் காடாக்கியுள்ளது. எல்லா மாவட்டங்களிலும் உள்ள ஏரிகள், கண்மாய்கள், ஆறுகள் - என அனைத்திலும் உடைப்பு ஏற்பட்டதன் காரணமாகவே இவ்வளவு பெரிய பேரழிவை மக்கள் எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

'பேய்மழை' என்று இயற்கையை எதிரியாகச் சித்தரிப்பதன் மூலம் இந்தப் பேரழி வைத் தோற்றுவித்த 'உண்மையான பேய்களாகிய' ஆளும் வர்க்கங்களும் அரசும் மக்களின் கோபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள எத்தணிக்கின்றன. முறையான தடுப்பணைகள் கட்டியும், ஏரிகள்-கால்வாய்களைத் தூர்வாரியும், வடிகால்கள் அமைத்தும், புதிய குளங்கள் - ஏரிகளை உருவாக்கியும் இருந்தால், இந்த மழையே இயற்கை அளித்த பெருங்கொடையாக மாறியிருக்கும். மக்கள் பல நூற்றாண்டு களாக உருவாக்கிப் பராமரித்து வந்திருந்த நீர்நிலைகளை நாசமாக்கிய அரசும் ஆளும் வர்க்கங்களும் வீட்டு மனைகளாக்கி ஆதாயமடைந்த நில முதலைகளும் தான் இந்தப் பேரழிவின் குற்றவாளிகள்.

வெள்ளத்தால் சூழப்பட்டு, உணவில்லாமல், குடிக்கத் தண்ணீர் இல்லாமல், குளிரில் தவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுவாரில்லை. சுனாமி பேரழிவின்போது கடலோரப் பகுதிகளைத் திரும்பியும் பார்க்காமல் புறக்கணித்த அதிகார வர்க்கம், இப்பொழுது வெள்ளம் சூழ்ந்த நகரங்களில் பாதுகாப் பான வீடுகளிலும் அலுவலகங்களிலும் அமர்ந்தபடி அறிக்கை விட்டுக் கொண்டி ருக்கிறது. முதல்வர் - அமைச்சர்களின் வருகைக்கு அணிவகுத்த நிற்கும் போலீசும், தண்ணீர் கேட்டுப் போராடினால் அடுத்த நிமிடமே தாக்குவதற்கு வந்து நிற்கும் அதிரடிப்படையும் அதிகார வர்க்கமும் இராணுவமும் பாதுகாப்பாகப் படுத்துறங்கி விட்டு வெள்ளம் வடியும் இடங்களில் நின்று புகைப்படத்துக்கு "போஸ்" கொடுக் கின்றனர். சுனாமியின் போதாவது மக்களால் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ள முடிந்தது. தற்போது மக்கள் தனித்தனி தீவுகளாக ஆக்கப்பட்டு விட்டதால், செய்வ தறியாது அனாதரவாய்க் குமுறுகின்றனர்.

அரிசி, வேட்டி-சேலை, நிவாரணத் தொகை என்று அரசிடம் கையேந்தி நிற் பதற்கும், அதிகார வர்க்கத்திடம் கெஞ்சுவதற்கும், இதற்காக ஓட்டுப் பொறுக்கி களின் பின்னால் அலைவதற்குமே மக்கள் பழக்கப்படுத்தப்பட்டுள்ளனர். சென்னை-வியாசர்பாடியில் நிவாரண உதவியைப் பெற நெரிசலில் சிக்கி 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கிராமப்புறங்களில் அ.தி.மு.க. குண்டர்கள் ரூ. 500/- வரை விழுங்கிவிட்டு எஞ்சியதையே அம்மாவின் கருணையாக கொடுக்கின்றனர்.

பெருமழையும் வெள்ளமும் ஓரிரு வாரங்களுக்கு நீடித்த போதிலும், அதன் பிறகு ஆட்சியாளர்களின் கிரிமினல் புறக்கணிப்பு காரணமாகத் தொடரும் கொடூரங் கள் பல காலம் நீடிக்கக் கூடியவை. உயிர்ப் பலிகள், அழிந்து போன வீடுகள் - உடை மைகள் - தொழில்கள், பல லட்சம் ஏக்கரில் அழுகிப் போன விவசாயம் என அனைத் திற்கும் இந்த அரசுதான் பொறுப்பு என்பதை மக்களை உணரச் செய்ய வேண்டி யுள்ளது. மறுபுறம், அரசு வழங்கும் அற்ப நிவாரணத்தைக் கூட கொள்ளையிடவும், குடியிருப்பு - சாலை அமைப்பு போன்றவற்றில் இலாபமீட்டவும் பிணந்தின்னிக் கழுகுகளாக வட்டமிடும் ஆளுங்கட்சிக் குண்டர்களையும் ஒப்பந்தக்காரர் - இடைத் தரகர்கள் கூட்டத்தையும் எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது. கவர்ச்சிவாத விளம் பர மழையில் நிவாரண - மறுவாழ்வுப் பணிகளைப் புறக்கணிக்கும் அரசுக்கும் முதலைக் கண்ணீர் வடிக்கும் ஓட்டுப் பொறுக்கிகளும் எதிராக மக்கள் குமுறலை ஒருமுகப்படுத்திப் போராட வேண்டியுள்ளது.

அற்ப நிவாரணங்கள் மட்டுமல்ல; மறுவாழ்வும் எங்களுக்குத் தேவை என்ற மக்களின் குமுறலை எதிரொலிக்கும் வகையில் போராட்டங்கள் கட்டியமைக்கப் பட வேண்டும். அதுதான் உண்மையான நிவாரணப் பணி; அரசியல் பணி; போராட்டப் பணி. •

படிப்பகம்

www.padippakam.com

# தாமிரவருணியை உறிஞ்சு வரும் அமெரிக்க 'கோக்'கை அடித்து விரட்டுவோம்!
## – தொடரும் பிரச்சார இயக்கம்

"**தா**மிரவருணியை உறிஞ்சு வரும் அமெரிக்க 'கோக்'கை அடித்து விரட்டுவோம்!'' என்ற முழக்கத்தின் அடிப்படையில் மறுகாலனியாதிக்கத்தின் கொடிய வெளிப்பாடான தண்ணீர் தனியார்மயத்திற்கு எதிராகவும், அதன் துலக்கமான வெளிப்பாடான ''கோக்''கிற்கு எதிராகவும் தமிழக மெங்கும் ம.க.இ.க.; வி.வி.மு.; பு.மா.இ.மு.; பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் வீச்சான பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு, கடந்த செப்.12-ஆம் தேதியன்று நெல்லையில் மிகப்பெரிய பேரணி - ஆர்ப்பாட்டத்தையும், 'கோக்' ஆலை அமைந்துள்ள நெல்லை - கங்கை கொண்டானில் மறியல் போராட்டத்தையும் நடத்தின.

தாமிரவருணியை நம்பியிருக்கும் நெல்லை, விருதுநகர், தூத்துக்குடி மாவட்ட மக்கள் குடிநீருக்கும் விவசாயத்திற்கும் போதிய தண்ணீர் இல்லாமல் தத்தளிக்கும் வேளையில் தாமிரவருணியை உறிஞ்ச கோக்கிற்கு தாராள அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசின் ''சிப்காட்'' நிறுவனம் கோக்கிற்கு தினமும் 9 லட்சம் லிட்டர் தண்ணீர் தர ஒப்புக் கொண்டுள்ளதாக செய்திகள் வருகின்றன. மேலும் 1 லிட்டர் கோக் தயாரிக்கும் போது, நிலத்தடியில் உள்ள 48 லிட்டர் நல்ல நீர் கழிவு நீராக மாறும். இதனால்தான் கேரளாவில் கோக் ஆலை இயங்கிய பிளாச்சிமடா கிராமம் சுடுகாடாகிப் போய்விட்டது. கோக் ஆலை அமையவுள்ள கங்கை கொண்டான் பஞ்சாயத்தில் அடங்கியுள்ள மானூர் ஊராட்சி மன்றத் தலைவர் கம்சன், கோக் ஆலைக்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தை ரத்துசெய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றிய பிறகு மர்மமான முறையில் இறந்து போயுள்ளார். கோக்கை அனுமதித்தால் தாமிரவருணி ஆறும் இந்த மண்ணும்கூட மர்மமான முறையில் மரணமடையும்.

இந்த உண்மைகளை விளக்கியும், தாமிரவருணியை உறிஞ்சு வரும் அமெரிக்க கோக்கை அடித்து விரட்ட அணிதிரள அறைகூவியும் புரட்சிகர அமைப்புகள் நெல்லை-தூத்துக்குடி மாவட்டங்களில் தொடர்ந்து பிரச்சார இயக்கத்தை நடத்திவருகின்றன. இதன் ஒரு பகுதியாக கடந்த அக்டோபர் 7-ஆம் தேதி முதல் நவம்பர் 19 வரை ஏறத்தாழ 20 தோழர்கள் தாமிரவருணி கரையோரக் கிராமங்களில் அன்றாடம் தொடர் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். தெருமுனைக் கூட்டங்கள், கலைநிகழ்ச்சிகள், துண்டுப் பிரசுரங்கள் வாயிலாக இப்பிரச்சாரத்தை மேற்கொண்ட தோழர்கள், கிராம மக்களிடம் கோக் ஆலையைத் தடை செய்யக் கோரும் விண்ணப்பத்தில் கையொப்பமும் பெற்றனர்.

புரட்சிகர அமைப்புகள் தொடர்ந்து கிராமம் கிராமமாகப் பிரச்சாரம் செய்வதைக் கண்டு பீதியடைந்த நெல்லை மாவட்டப் போலீசு, வெளிப்படையாகவே கோக்கின் அடியாளாகச் செயல்பட்டது. மாவட்டம் முழுவதும் 302-ஏ பிரிவு சட்டத்தை ஏவி பிரச்சாரத்துக்குத் தடை விதித்தது. பிரச்சாரத்தில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவார்கள் என்று மிரட்டியது. கிராம மக்களிடம் ''இவர்கள் நக்சல்பாரி தீவிரவாதிகள்; கோக் ஆலையைத் தடை செய்யக் கோரும் அவர்களது விண்ணப்பத்தில் கையெழுத்து போடாதீர்கள்; மீறி கையெழுத்து போட்டால் உங்கள் மீது வழக்கு போடுவோம்; கோர்ட் - வாய்தா என்று நீங்கள் அலைய வேண்டி வரும்'' என்று அச்சுறுத்தியது.



போலீசின் தடைகள், அச்சுறுத்தல்களையும் மீறி நெல்லை - தூத்துக்குடி மாவட்ட கிராமங்களில் பிரச்சாரம் மற்றும் மக்களிடம் கையெழுத்து பெறும் இயக்கத்தை தோழர்கள் வெற்றிகரமாக நடத்தியுள்ளனர். பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களிடம் கோக் ஆலையைத் தடை செய்யக் கோரும் விண்ணப்பத்தில் கையெழுத்து பெற்றுள்ளதோடு, பல பத்தாயிரக்கணக்கான மக்களிடம் கோக்கிற்கு எதிரான பிரச்சாரத்தையும் நடத்தியுள்ளனர்.

ஏறத்தாழ 45 நாட்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வந்த 20-க்கும் மேற்பட்ட தோழர்களுக்கு உண்ண உணவும் இரவில் தங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுத்த மக்கள், தாராளமாக நன்கொடை அளித்து இப்பிரச்சார இயக்கத்தை உற்சாகத்துடன் வரவேற்று ஆதரித்தனர். சில கிராமங்களில், உளவாளிகள் மூலம் தகவல் கிடைத்து, தோழர்களைக் கைது செய்ய போலீசு தேடி வந்தபோது, கிராம மக்கள் தங்கள் வீடுகளிலும் வழிபாட்டுத் தலங்களிலும் தங்க வைத்து பாதுகாப்பு கொடுத்து ஆதரித்தனர். ''தாமிரவருணி எங்கள் ஆறு; அமெரிக்க கோக்கே வெளியேறு'' என்ற போராட்டப் பாடல், இப்போது எல்லா கிராம மக்களும் விரும்பி இசைக்கும் பாடலாகியுள்ளது.

கோக் ஆலையினால் ஏற்படும் பாதிப்புகளை மக்களுக்கு விளக்கியதைத் தொடர்ந்து, கோக் ஆலைக்கு வேலைக்குச் செல்வதை அவமானமாகக் கருதி, பல கூலித் தொழிலாளிகள் அவ்வேலையிலிருந்து விலகி விட்டனர். சில இளைஞர்கள், கோக் ஆலையில் வேலைக்குச் சேருவதற்காக் வாங்கி வைத்திருந்த விண்ணப்பத்தை, மக்கள் முன்பாக சுக்குநூறாகக் கிழித்தெறிந்து தங்கள் போர்க்குணத்தை வெளிப்படுத்தினர். பல கிராமங்களில், கோக் ஆலைக்கு ஆதரவாகப் பேசும் ஓட்டுக் கட்சிப் பிரமுகர்களிடம்


படிப்பகம்

www.padippakam.com

வாதம் செய்து மக்கள் காறி உமிழ்ந்து, அவர்களைத் தனிமைப்படுத்துகின்றனர்.

பணபலத்தையும் அரசு மற்றும் போலீசின் அதிகார பலத்தையும் கொண்டு, ஆலையின் கட்டுமானப் பணிகளை முடித்து உற்பத்தியைத் தொடங்கப் போவதாகக் கொக்கரிக்கிறது அமெரிக்க கோக் நிறுவனம். அதற்கெதிராக மக்கள் போராட்டத்தைக் கட்டியமைக்கும் மகத்தான பணியை புரட்சிகர அமைப்புகள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன. தொடரும் பிரச்சார இயக்கத்தால் உணர்வு பெற்று வரும் மக்கள், நாளை பெரும் சூறாவளியாகத் திரண்டெழுந்து அமெரிக்க கோக்கை அடித்து விரட்டுவார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

**- பு.ஜ. செய்தியாளர்கள்.**

# பாதிரிகளின் பகற் கொள்ளை!

# ஊழலின் உறைவிடமாக திருச்சி-ஜோசப் கல்லூரி

திருச்சியில் தொன்மை வாய்ந்த செயிண்ட் ஜோசப் கல்லூரி தனது கல்விச் சேவையால் ஒரு காலத்தில் புகழ் பெற்றிருந்தது. இன்று, அக்கல்லூரியில் நடக்கும் ஊழல் கொள்ளையும் மோசடியும் அடாவடித்தனங்களும் மெதுவாகக் கசியத் தொடங்கி நகரெங்கும் நாறி வருகிறது.

இக்கல்லூரியில் வரலாறு, ஆங்கிலம், வேதியல் துறைகளுக்கான ஆய்வுக் கூடங்களைக் கட்டுவதற்கு தலா ரூ. 3 லட்சம் வீதம் பல்கலைக் கழக மானியக் குழு கொடுத்துள்ளது. இதில் ஆங்கிலத் துறைக்கு மட்டும் மொழிப் பயிற்சிக் கூடத்தைக் கட்டி, மூடி வைத்திருந்தனர். மற்ற இரு துறைகளுக்கான தொகை எங்கே போனது என்பது பரமபிதாவுக்கே வெளிச்சம். மாணவர்களுக்கு இலவசமாக மொழிப் பயிற்சி அளிக்க நிறுவப்பட்ட இக்கூடம் ஒரு பாதிரியாரிடம் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. மொழிப் பயிற்சியளிக்க இங்கு மாணவர்களிடம் கட்டணம் வசூலித்துக் கொள்ளையடிப்பது கேள்வி முறையின்றித் தொடர்கிறது. கட்டணம் செலுத்தாதவர்களுக்கு, ஏசுவேயானாலும் தட்டினாலும் கதவைத் திறக்க மாட்டார்கள்.

கல்லூரி நிர்வாகம், ''அருள் தந்தை'' லாசர் மூலமாக பல நாடுகளின் புரவலர்களிடமிருந்து நூலகம் கட்ட பல கோடி ரூபாய்களைத் திரட்டியுள்ளது. இதற்காக அடிக்கல் நாட்டிவிட்டு, மாநகராட்சியில் அனுமதி வாங்குவதற்கான செலவு என்ற பெயரில் கல்லூரி நிர்வாகச் செயலர் செல்வநாயகம் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாயை மோசடி செய்துள்ளார். இம்மோசடியை மூடிமறைக்கவும் 'தேவ அப்பத்தை'ப் பங்கிடுவதில் ஏற்பட்ட சண்டையிலிருந்து தப்பிக்கவும் மருத்துவ விடுப்பு என்ற பெயரில் இரு மாத காலத்துக்குத் தலைமறைவானார். பின்னர், சமாதான 'அருள்' கிடைத்து மீண்டும் கல்லூரிக்குள் வந்துள்ளார்.

இக்கல்லூரியில் உள்ள செப்பேடு துறையில் மாணவர்களைக் கிராமப்புற சமூக சேவைக்கு காரில் அழைத்துச் சென்றதாகக் கணக்கு காட்டி பல ஆயிரங்களைச் சுருட்டியுள்ளனர். உண்மையில், மாணவர்களை நகரப் பேருந்திலும், சைக்கிளிலும் தான் அழைத்துச் சென்றனர்.



இவை வெளியே கசிந்த ஒருசில ஊழல் மோசடிகள்தான். பாதிரிகளின் வெள்ளை அங்கிக்குள் மூடி மறைக்கப்பட்ட மோசடிகள் ஏராளம். இக்கல்லூரி ஆசிரியர்களும்-மாணவர்களும் ஆதாரபூர்வமாக அளித்த தகவல்களின் அடிப்படையில், ''பாதிரிகளின் பகற்கொள்ளை; ஊழலின் உறைவிடமாக ஜோசப் கல்லூரி'' என்று தலைப்பிட்ட சுவரொட்டி பிரச்சாரத்தை கடந்த அக்டோபரில் இப்பகுதியில் இயங்கும் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி மேற்கொண்டது.

இச்சுவரொட்டிகளைக் கண்டு அரண்டு போன பாதிரி பெருச்சாளிகள், தமது அடியாட்களை ஏவி இவற்றைக் கிழித்தெறிய உத்தரவிட்டனர். நள்ளிரவில் இரகசியமாக சுவரொட்டிகளைக் கிழிக்க வந்த இந்த அடியாட்களை பு.மா.இ.மு.வினர் விரட்டியடித்தனர். பின்னர், போலீசாரை உரிய முறையில் கவனித்து இச்சுவரொட்டிகளை கிழித்தெறிய நிர்வாகம் முயற்சித்தது. அதன்படி, சுவரொட்டிகளைக் கிழிக்க வந்த போலீசாரிடம் செஞ்சட்டைப் படையாகத் திரண்ட பு.மா.இ.மு.வினர் இப்பிரச்சாரத்தின் அவசியத்தை விளக்கியதும் அவர்களும் பின்வாங்கிக் கொண்டனர். பின்னர், இரண்டு விசுவாச பேராசிரியர்களையும் ஒரு மாணவரையும் அனுப்பி சுவரொட்டிகளைக் கிழிக்க நிர்வாகம் முயற்சித்தது. பு.மா.இ.மு.வினர் அவர்களைப் புகைப்படம் எடுக்க முற்பட்டதும், அவர்கள் தலைதெறிக்க ஓடிவிட்டனர். அதன்பிறகு, தமது பணியாளர்கள் இருவரை சுவரொட்டிகளைக் கிழிக்க நிர்வாகம் அனுப்பியது. அவர்கள் தயங்கித் தயங்கி கிழிக்க முற்பட்டபோது, ''கழுதைதான் பேப்பர் தின்னும்; உங்க பாதிரியாரும் கூடவா பேப்பர் தின்கிறார்?'' என்று ஒரு தோழர் கேட்டு எச்சரிக்கவும் அவர்கள் ஓடிப் போயினர்.




தேவ ஊழியம் செய்வதாகக் கூறிக் கொள்ளும் இப்பாதிரிகள், ஊழலை அம்பலப்படுத்திய சுவரொட்டிகளைக் கிழிக்கக் கிளம்பிய இழிசெயலானது, அவர்களது ஊழல்-மோசடிகளை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. கல்லூரியை நிர்வகிக்கும் இப்பாதிரிகள் தமது பாவக் கறைகளைக் கழுவி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாதவரை பு.மா.இ.மு.வின் போராட்டம் ஓயாது. பெற்றோர் - ஆசிரியர் - மாணவர்களின் பேராதரவோடு அடுத்தக் கட்டப் போராட்டத்தைத் தொடங்க பு.மா.இ.மு. தயங்காது.

**- புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, திருச்சி.**

www.padippakam.com

# விவசாயிகளைக் காவு கொள்ளும் தாராளமயக் கொள்கை



விவசாயம் நொடித்துப் போனதால், தனது நோய்க்குக் கூட மருத்துவம் பார்த்துக் கொள்ள முடியாமல், அந்நோய்க்கே பலியாகி விட்ட மகாராஷ்டிரா மாநில விவசாயி ஷாம்ராவ் கதாலே. கடன் தொல்லையால் இவரது மகன் ஏற்கெனவே தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனார். இதனால் இவரது மனைவிக்கு மனநிலை பாதிக்கப்பட்டு விட்டது. வறுமையின் காரணமாக 31 வயதான பின்னும் இவரது மகள் கங்காவுக்கு திருமணம் செய்து வைக்க முடியவில்லை. அலங்கோலமாகிவிட்ட இந்திய விவசாயிகளின் வாழ்க்கைக்கு, ஷாம்ராவ் கதாலேயின் குடும்பம் இன்னுமொரு உதாரணம்.

தேசிய மாதிரி கள ஆய்வு நிறுவனம் (National Sample Survey Organisation) 6,638 கிராமங்களில், 51,770 விவசாயக் குடும்பங்களிடம், அவர்களின் வருமானம்; அத்தியாவசியத் தேவைகளுக்கு அக் குடும்பங்கள் மாதந்தோறும் செய்யும் செலவு; அவர்களுக்குள்ள கடன் ஆகியவற்றைப் பற்றி 2003-ஆம் ஆண்டு கள ஆய்வொன்றை நடத்தி யது. அதில், ஒரிசா, ஜார்கண்டு, சட்டீஸ்கர், பீகார், ம.பி. ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த விவசாயக் குடும்பங்கள், தங்களின் மாதாந்திர அத்தியாவசிய தேவைகளுக்கு 225/- ரூபாய் கூடச் செலவழிக்க முடியாமல் வாழ்வது தெரிய வந்தது.

மற்ற மாநிலங்களில் கூட விவசாயிகளின் வாழ்க்கை சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை. இந்திய அளவில், கிராமப்புறங்களில் வாழும் விவ சாயக் குடும்பங்கள், உணவு, உடை, கல்வி, மருத்து வம் போன்ற தேவைகளுக்கு, மாதந்தோறும் சராச ரியாக 503 ரூபாய் தான் செலவழிப்பதாக இந்த ஆய்வு குறிப்பிடுகிறது.

விலைவாசி விண்ணுக்குப் பறந்து கொண்டிருக் கும் இந்தக் காலத்தில், (மாதாந்திர செலவு) 225 ரூபாய்க்கு (ஒரு நாளைக்கு ஏறத்தாழ எட்டு ரூபாய்) என்ன மதிப்பு இருந்துவிட முடியும்? தெருவோர தேநீர் கடையில், மூன்று டீ குடித்தாலே எட்டு ரூபாய் கரைந்து விடும். வெறும் மூன்று கிளாஸ் தேநீரின் மதிப்பை மட்டுமே கொண்ட எட்டு ரூபாயை வைத்துக் கொண்டு, ஐந்து அல்லது ஆறு பேரைக் கொண்ட குடும்பம், மூன்று வேளைக்கு அரை வயிறாவது சாப்பிட முடியுமா? மாதம் 225 ரூபாய் என்பது சாப்பாட்டுக்கே பத்தாத பொழுது, கல்வி, மருத்துவம் போன்ற செலவு களை எப்படிச் சமாளிக்க முடியும்?

ஒரு செலவைத் தியாகம் செய்தால், இன் னொரு செலவைச் சமாளிக்கலாம் எனப் பொதுவா கக் கூறலாம். ஆனால், விவசாயத்தில் தாராளமயம் ஏற்படுத்திவரும் பாதிப்புகள் பற்றி ஆய்வு செய்து வரும் சாய்நாத் என்ற பத்திரிகையாளர், ''கிராமப் புற மக்களுள் 23 சதவீதம் பேர், வறுமையின் கார ணமாக தங்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு மருத் துவம் பார்த்துக் கொள்வதையே கைவிட்டு விட்ட தாக''க் குறிப்பிடுகிறார். இதற்காக, இந்திய சுகாதார அமைச்சகம் வெட்கப்படவில்லை. மாறாக, தாராள மயத்தின் பின் இந்தியாவில் மருத்துவ சுற்றுலா (வெளிநாட்டினர் இந்தியாவிற்கு வந்து சிகிச்சை செய்து கொள்வது) பெருகி விட்டதாகப் பீற்றிக் கொள்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

விவசாயிகளின் வாழ்க்கையைப் பற்றிய இந்த ஆய்வு கூட முழுமையானதல்ல; ஏனென்றால், இந்த ஆய்வு கிராமப்புறங்களில் நிலவும் வர்க்க வேறுபாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், நிலப்பிரபுக்களையும், ஏழை விவசாயிகளையும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்கிறது.

மகாராஷ்டிராவைச் சேர்ந்த மூன்றரை ஏக்கருக்குச் சொந்தக்காரரான கணேஷ் பீமாராவின் குடும்பம், மாதாந்திரச் செலவைச் சமாளிக்க வயிற்றில் ஈரத்துணியைப் போட்டுக் கொள்வதாகக் கூறுகிறது. ''கோதுமையை அரைப்பதற்குக் கூட எங்களிடம் காசில்லை'' என்கிறார், தற்கொலை செய்து கொண்ட கணேஷ் தாக்கரேயின் மனைவி ரேகா. இப்படிப்பட்ட அரைப்பட்டினி நிலைமையை நிலப்பிரபுக்களின் குடும்பங்களில் பார்க்க முடியாது.

மேலும், இந்த ஆய்வு நிலத்தைச் சொந்தமாகக் கொண்டுள்ள விவசாயிகளிடம் மட்டும்தான் நடத்தப்பட்டுள்ளது. நிலமில்லாத கூலி விவசாயிகளைப் பற்றி இந்த ஆய்வு அக்கறை காட்டவில்லை. மூன்றரை ஏக்கர் நிலம் சொந்தமாகக் கொண்டுள்ள நடுத்தர விவசாயக் குடும்பமே அரைப்பட்டினியில் வாழும்போது, கூலி விவசாயிகளின் வாழ்க்கை அதைவிட மோசமானதாகத்தான் இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

### கடனும் தற்கொலைச் சாவுகளும்

''கடன் இல்லாத ஒரு விவசாய குடும்பத்தைக் கூடப் பார்க்க முடியவில்லை'' என விவசாயத்தின் நசிவைச் சுட்டிக் காட்டும் இந்த ஆய்வறிக்கை, ''இந்தியாவெங்கும் 4.34 கோடி விவசாயக் குடும்பங்கள் மீள முடியாத கடனில் மூழ்கிக் கொண்டிருப்பதாக''க் குறிப்பிட்டுள்ளது.

மிகவும் பின்தங்கிய, வறிய மாநிலமான பீகார், கடன்பட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கையில் 16-ஆவது இடத்தில் இருக்கிறது. அதேசமயம், முதலாளித்துவ பத்திரிகைகளால் ஹை-டெக் மாநிலமாகத் தூக்கிக் கொண்டாடப்பட்ட ஆந்திரா முதல் இடத்திலும்; ''தகவல் - தொழில்நுட்ப புரட்சி'' நடந்து கொண்டிருக்கும் தமிழ்நாடு இரண்டாம் இடத்திலும் இருக்கின்றன.

அரசாங்கக் கொள்முதலை நிறுத்துவது; மின்கட்டண உயர்வு; பாசன வசதியைத் தனியார்மயமாக்குவது என எவ்வளவு விரைவாக, ஒரு மாநிலத்தில் விவசாயத்தில் தாராளமயம் நடைமுறைப்படுத்தப்படுகிறதோ, அவ்வளவு விரைவாக அம்மாநிலம் தனது விவசாயிகளைப் பெரும் கடன் சுமைக்குள் தள்ளிவிடுவதை, இக்கடன் பட்டியலில் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தர வரிசையில் இருந்து புரிந்து கொள்ள முடியும்.



கடன் வாங்கி விவசாயம் செய்து போண்டியானதால், தற்கொலை செய்து கொண்டு விட்ட கணேஷ் தாக்கரே (புகைப்படத்தில் இருப்பவர்). ''கோதுமை அரைக்கக் கூட எங்களிடம் காசில்லை'' என்கிறார், அவரது மனைவி ரேகா. இந்த அரைப்பட்டினி வாழ்க்கைக்கு பெயர்தான் பொருளாதார முன்னேற்றமா?

1991-க்கு முன்பாக இந்திய விவசாயிகளுள் 26 சதவீதம் பேர்தான் கடன் சுமையால் பாதிக்கப்பட்டிருந்தனர். தாராளமயம் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு, இது 50 சதவீதத்தைத் தாண்டிவிட்டது.

தாராளமயம் திணிக்கும் இக்கடன் சுமையை, பெரும் நிலப்பிரபுக்களோ, பணக்கார விவசாயிகளோ சுமக்கவில்லை. சிறிய-நடுத்தர விவசாயிகள்தான் இக்கடன் சுமையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் இக்கள ஆய்வு அம்பலப்படுத்தியிருக்கிறது. பயிர் செய்ய கடனுக்கு மேல் கடன் வாங்கி மூழ்கிப் போன விவசாயிகளுள் 60 சதவீதப் பேர் 1 ஹெக்டேருக்குள் நிலம் வைத்திருக்கும் சிறிய விவசாயிகள்; 30 சதவீதப் பேர் 1 ஹெக்டேரில் இருந்து 4 ஹெக்டேர் வரை நிலம் வைத்திருக்கும் நடுத்தர விவசாயிகள்.

சாதி ரீதியாக எடுத்துக் கொண்டால், கடன் சுமையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுள் 18 சதவீதப் பேர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள்; 10 சதவீதப் பேர் பழங்குடி இனமக்கள்; 44 சதவீதப் பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதியை சேர்ந்தவர்கள். தாராளமயத்தை எதிர்க்க, இவர்கள் சாதிய வேறுபாடுகளைக் கடந்து, வர்க்க ரீதியாக ஒன்றுபட வேண்டும் என்பது அவசியமாகிறது. ஆனால், சாதி சங்கங்களும், சாதிக் கட்சிகளும்

www.padippakam.com

இந்த வர்க்க ஒற்றுமை ஏற்படாமல், தடுப்பதன் மூலம் தாராளமயத்திற்கு மறைமுகமாக சேவை செய்கின்றன.

நாடெங்கும் விவசாயிகள் கொத்து கொத்தாகத் தற்கொலை செய்து கொண்ட பொழுது, முன்பு ஆட்சியில் இருந்த பா.ஜ.க. கூட்டணி இந்தியா ஒளிர்வதாகப் பிரச்சாரம் செய்தது. பா.ஜ.க. ஆட்சியின் மீது விவசாயிகளுக்கு இருந்த கோபத்தைப் பயன்படுத்திக் கொண்டு காங்கிரசு கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றிய பிறகும், விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது நின்றபாடில்லை. மகாராஷ்டிரா மாநிலத்தில் மட்டும், கடந்த 10 மாதங்களுக்குள், விதர்பா பகுதியைச் சேர்ந்த 200 பருத்தி விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.



கந்துவட்டிக் கும்பலிடம் தனது நிலத்தைப் பறிகொடுத்துவிட்ட விவசாயி கைலாஷ். மகாராஷ்டிராவைச் சேர்ந்த கந்துவட்டிக் கும்பல் இப்பொழுது விவசாயிகளுக்கு கடன் கொடுக்க நிலத்தை அடமானம் கேட்பதில்லை. மாறாக, கடன் தொகைக்காகத் தங்களிடம் நிலத்தை விற்று விட்டதாக மோசடி பத்திரங்களைத் தயார் செய்து, நிலங்களை அபகரித்து வருகின்றன.

மகாராஷ்டிராவின் வார்தா பகுதியைச் சேர்ந்த ஒரு விவசாயி வங்கிக் கடன் பெற, பொதுத்துறை வங்கியொன்றில் வேலை பார்க்கும் தனது நண்பரிடம் ஆலோசனை கேட்டிருக்கிறார். அந்த நண்பர், "உனக்குக் கடன் கிடைக்கும்; ஆனால் விவசாயி என்று சொல்லாதே" எனக் கூறியிருக்கிறார். இந்த ஆலோசனையின்படி, அந்த விவசாயி ஒரு விதை விற்பனை நிலையத்தைத் தொடங்க கடன் கேட்டவுடன், அவருக்கு கடனாக இரண்டு இலட்ச ரூபாய் கிடைத்திருக்கிறது. அவர் ஆரம்பித்த விதை நிறுவனம் நட்டமடைந்த பிறகு, 25,000 ரூபாயைப் பெற்றுக் கொண்டு, அவர் வாங்கிய கடன் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

கந்துவட்டிப் பிரச்சினையால்தான் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதாகவும்; கந்துவட்டிக்குப் பதிலாக, அரசாங்கக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்துவிட்டால், விவசாயிகளின் தற்கொலை நின்று போகும் என காங்கிரசு ஆட்சி கூறுகிறது. கடந்த இரண்டு வருடங்களில் அரசு வங்கிகள் மூலம் ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்திருப்பதாக நிதியமைச்சர் ப.சிதம்பரமும் பீற்றிக் கொள்கிறார்.

இந்தப் பிரச்சாரத்தில் இரண்டு விதமான மோசடிகள் அடங்கியுள்ளன. முதலாவதாக அரசாங்கக் கடன் எல்லா விவசாயிகளுக்கும் கிடைப்பதில்லை. தேசிய மாதிரி கள ஆய்வு நிறுவனம், "1,000 விவசாயிகள் வங்கிக் கடனுக்கு விண்ணப்பித்தால், அவர்களுள் 356 விவசாயிகளுக்குத்தான் வங்கிக் கடன் கிடைப்பதாக"க் கூறுகிறது.

"அந்நிறுவனம் வெளியிட்டுள்ள இந்தப் புள்ளி விவரம் கூட மிகைப்படுத்தப்பட்ட ஒன்று" என்கிறார், பத்திரிகையாளர் சாய்நாத். "மகாராஷ்டிராவில் 30 இலட்சம் பருத்தி விவசாயிகள் உள்ளனர். இவர்களுள் 10 சதவீத விவசாயிகளுக்குக் கூட வங்கிக் கடன் கிடைக்கவில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார், அவர்.

காவிரிப் பாசனப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, முழுமையாகக் கடன் கொடுக்க வேண்டுமானால், அதற்கு 800 கோடி ரூபாய் தேவைப்படும்; ஆனால், இதற்கு தமிழக அரசு ஒதுக்கியிருப்பதோ வெறும் 75 கோடி ரூபாய் தான். இந்த அறிவிப்பு கூட காகிதத்தில் தான் இருக்கிறது.

இந்த ஆண்டு சம்பா பருவத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் கொடுக்க தமிழக அரசு 44 இலட்சம் ரூபாயை மட்டுமே ஒதுக்கியிருப்பதாகவும்; காவிரி பாசனப் பகுதியில் 5 சதவீத விவசாயிகளுக்குக் கூட அரசுக் கடன் கிடைப்பதில்லை என்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உண்மை நிலையைப் புட்டு வைத்துள்ளது.

தமிழக அரசு அறிவித்துள்ள வட்டித் தள்ளுபடி கூட கண்துடைப்பு நடவடிக்கைதான். முன்பு வாங்கிய கடனை யார் முழுமையாக அடைக்கிறார்களோ, அவர்களுக்கு மட்டுமே வட்டித் தள்ளுபடி கிடைக்கும் என்பதுதான் ஜெயா அறிவித்துள்ள சலுகையின் பின்னுள்ள உண்மை.

விவசாயத்திற்கு அறிவிக்கப்படும் கடனை, சலுகைகளை விவசாயிகளின் பெயரில் வர்த்தகச் சூதாடிகள்தான் அனுபவிக்கிறார்கள் என்பதைத்தான் இந்த உண்மை சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

### தாராளமயம் என்ற புதை குழி

1991-க்கு முன்பு கூட விவசாயிகள் கடன் வாங்கித்தான் விவசாயம் செய்து வந்தார்கள். அப்பொழுதெல்லாம் நடந்திராத தற்கொலைச் சாவுகள், இப்பொழுது நடைபெறுவதற்குக் காரணமே தாராளமயம்தான். ஒருபுறம் தாராளமயத்தால் உற்பத்திச் செலவு அதிகரித்துக் கொண்டே போகிறது; இன்னொருபுறமோ உற்பத்திச் செலவை ஈடு செய்யக்கூடிய விலை கூட விவசாயிகளுக்கு சந்தையில் இருந்து கிடைப்பதில்லை.

மகாராஷ்டிரா மாநில அரசு, கடந்த ஆண்டு வரை ஒரு குவிண்டால் பருத்தியை ரூ. 2,250/-க்குக் கொள்முதல் செய்து வந்தது. இந்த ஆண்டு கொள்முதல் விலையை ரூ. 1,700/- ஆகத் தடாலடியாகக் குறைத்து விட்டது. காரணம் கேட்டால், சர்வதேசச் சந்தையில் பருத்தியின் விலை குறைந்துவிட்டது என்கிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

தமிழக அரசு ஏற்கெனவே நேரடி நெல் கொள்முதல் செய்வதை நிறுத்தி விட்டது. மைய அரசின் ஏஜெண்டாக இருந்து கொண்டு கொள்முதலை நடத்துவதால், நெல் விவசாயிகளுக்கு வழங்கி வந்த ஊக்கத் தொகையையும் நிறுத்திவிட்டது. மேலும், ஈரப்பதம், தரப்பிடித்தம், சுத்தப்படுத்துதல் என்ற பெயரில், எவ்வளவு தூரத்திற்கு நெல் கொள்முதலைக் கழித்துக் கட்ட முடியுமோ அவ்வளவு தூரத்திற்குக் கழித்துக் கட்டியும் வருகிறது.

நெல், கோதுமை, கரும்புக்கு அரசாங்கம் தரும் ஆதார விலை கூட, அவற்றின் உற்பத்திச் செலவை ஈடு செய்யும் வகையில் இருப்பதில்லை. அனைத்து விவசாய விளைபொருட்களுக்கும், பத்தாண்டுகளுக்கு முன்பு என்ன விலை கிடைத்து வந்ததோ, அந்த விலைதான் தற்பொழுதும் கிடைப்பதாக ஒரு விவசாய வல்லுநர் கூறுகிறார்.

உற்பத்திச் செலவைக் கூடத் திரும்ப எடுக்க முடியாத பொழுது, விவசாயிகளால் வாங்கிய கடனை எப்படி அடைக்க முடியும்? கந்துவட்டிக் கும்பல், தான் கொடுத்த கடனுக்கு, அடியாட்களை அனுப்பி மிரட்டி, விவசாயிகளின் நிலங்களைக் கைப்பற்றிக் கொள்கிறது என்றால், அரசாங்கம் சட்டப்படி ''ஜப்தி'' செய்கிறது. ஏற்கெனவே வாங்கிய கடனை அடைத்தால் தான் புதிதாகக் கடன் தருவோம் எனக் கூறி, விவசாயிகளை கந்துவட்டிக் கும்பலிடமே தள்ளிவிடுகிறது.

இது ஒருபுறமிருக்க, மைய அரசு, தாராளமயத்தின் பின் விவசாயத்திற்குக் கொடுத்து வந்த மானியத்தைப் பெருமளவு குறைத்துவிட்டது. அதே சமயம், உலகமயமாக்கம் என்ற பெயரில், அமெரிக்க அரசிடமிருந்து 17,550 கோடி ரூபாய் மானியமாகப் பெறும் பருத்தி விவசாயிகளோடு, நம் நாட்டு விவசாயிகளைப் போட்டி போடச் சொல்கிறார்கள். அந்நிய நாடுகளில் இருந்து மிகக் குறைந்த விலையில் இறக்குமதியாகும் விவசாய விளைபொருட்கள், நம்நாட்டு பாரம்பரிய விவசாயத்திற்குக் குழிபறிக்கிறது. இத்தாராள இறக்குமதியை ஊக்குவிக்கும் ஆட்சியாளர்கள், நமது நாட்டு விவசாயிகளை காட்டாமணக்கு, வெண்ணிலா போன்ற மாற்றுப் பயிருக்கு மாறச் சொல்கிறார்கள்; இதன்மூலம், நமது நாடு, உணவுக்குக் கூட அந்நிய நாடுகளிடம் கையேந்தி நிற்கக் கூடிய அபாயகரமான எதிர்காலத்தை உருவாக்குகிறார்கள்.

•••

“இந்தியாவில் உள்ள கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 178-லிருந்து 311 ஆக உயர்ந்து விட்டது; அவர்களின் மொத்த சொத்து மதிப்பும் 2.13 இலட்சம் கோடி ரூபாயில் இருந்து 3.14 இலட்சம் கோடி ரூபாயாக அதிகரித்து விட்டது. இதுதான் இந்த ஆண்டின் மகிழ்ச்சியான செய்தி'' என பிசினஸ் ஸ்டாண்டர்டு என்ற பத்திரிகை பெருமிதமாகக் குறிப்பிட்டுள்ளது. தாராளமயத்தின் பின், உழைத்தவர் மெலிந்தனர்; வலுத்தவர் கொழுத்தனர் என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

ஒரு 311 பேரிடம் சொத்துக் குவிவதைப் பற்றி பக்கம் பக்கமாக கட்டுரைகளை வெளியிடும் முதலாளித்துவப் பத்திரிகைகள், கோடிக்கணக்கான விவசாயிகளின் அரைப்பட்டினி வாழ்க்கையைத் திட்டமிட்டே மறைக்கின்றன. ஓட்டுக்கட்சிகளோ ஒருபுறம் தாராளமயத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டே, இன்னொருபுறம் உழவர் பாதுகாப்புத் திட்டம் போன்ற அற்ப சலுகைகளை வீசியெறிந்து, விவசாயிகளின் பிரச்சினையை நீர்த்து போகச் செய்ய முயலுகின்றன.

போலி கம்யூனிஸ்டுகள் கூட, இடது முன்னணி ஆளும் மே.வங்கத்தை முதல் மாநிலமாக்குவது என்ற பெயரில், ஒப்பந்த விவசாயம் போன்ற தாராளமயத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றனர். தாராளமயத்தை ஒழித்துக் கட்டுவதற்குப் பதில், மனித முகத்துடன் கூடிய தாராளமயத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என உபதேசிக்கின்றனர்.

உலக வர்த்தகக் கழகத்தில் இருந்து வெளியேறக் கோரி விவசாயிகள் போராடினால், ''அது இந்தியப் பொருளாதாரத்திற்கு ஆபத்து'' என ஓட்டுக் கட்சிகளும், பொருளாதார வல்லுநர்களும் பூச்சாண்டி காட்டுகின்றனர். ஏற்கெனவே அரைப்பட்டினியாக வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு, இனியும் புதிதாக என்ன ஆபத்து வந்து விடும்? உலக வர்த்தக கழகத்தில் இருந்து வெளியேறினால், இந்த 311 பேரின் சொத்துக்கு ஆபத்து வந்துவிடும் என்பது தான் இவர்களின் அச்சம். இப்படிப்பட்ட நிலையில், ஓட்டுக் கட்சிகளைப் புறக்கணித்து, மறுகாலனியாக்கத்தை எதிர்த்துப் போராடி வரும் புரட்சிகர அமைப்புகளின் தலைமையை ஏற்பதுதான் விவசாயிகள் முன்னுள்ள ஒரே மாற்று வழி!

• ரஹீம்



**உலக வர்த்தகக் கழகத்தில் இருந்து இந்தியாவை வெளியேறக் கோரி மும்பையில் நடந்த மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்ட விவசாயிகள். எந்தவொரு ஓட்டுக் கட்சிக்காவது விவசாயிகளின் இந்தக் கோரிக்கைகளை ஆதரிக்கும் திராணியுண்டா?**

### அட்டைப் பட விளக்கம்

**விவசாயம் நொடித்துப் போனதால் மனமுடைந்து 28 வயதிலேயே தனது கணவன் மாருதி ராஸே தற்கொலை செய்து கொண்டதால், தனது கைக் குழந்தையோடு ஆதரவற்று நிற்கும் இளம் கைம்பெண் வர்ஷா. இவருக்குச் சேர வேண்டிய நட்டஈட்டுத் தொகையைக் கூட உடனடியாகத் தராமல், அவரை அலையவிட்டு அவமானப்படுத்தி, பிறகு, ''விவசாயிகளின் நண்பன்'' என்ற விளம்பரம் தேடிக் கொள்ளும் நோக்கத்தோடு நட்டஈட்டைக் கொடுத்தது, அரசு.**

www.padippakam.com

# பீகார் சிறை தகர்ப்பு:
# நக்சல்பாரிகளின் புரட்சிகர வீரசாகசம்


''ஐயோ! பயங்கரவாதம்! சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்து விட்டது!'' என்று முதல் பக்கச் செய்தியுடன் 'தேசிய' பத்திரிகைகள் தலையங்கம் தீட்டி அலறின. ''இராணுவத்தைக் கொண்டு காடுகளில் தேடுதல் வேட்டையைத் தீவிரப்படுத்தியுள்ளோம்; பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தியுள்ளோம்'' என்று கிளிப்பிள்ளை போல் அறிக்கை விடுகிறார்கள் போலீசு அதிகாரிகள். பீதி ஒருபுறம்; அற்பமாகக் கருதப்பட்டவர்கள் இப்படித் திடீர் தாக்குதல் நடத்தி முகத்தில் கரிபூசி விட்டார்களே என்ற அவமானமும் கவலையும் மறுபுறம். அண்மையில் பீகாரின் ஜெகன்னாபாத் சிறைச்சாலை ''மாவோயிஸ்டுகள்'' எனப்படும் நக்சல்பாரி புரட்சியாளர்களால் தகர்க்கப்பட்டதைக் கண்டு செய்வதறியாமல் கையைப் பிசைந்து கொண்டிருக்கின்றனர் ஆட்சியாளர்கள்.

கடந்த நவம்பர் 13-ஆம் தேதியன்று இரவு 9 மணியளவில் ஜெகன்னாபாத் நகரில் குவிந்த நக்சல்பாரி புரட்சியாளர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் - போலீசு தலைமை நிலையத்தைச் சுற்றி வளைத்து, அடுத்த சில நிமிடங்களில் சிறைச்சாலைக்கும் போலீசு குடியிருப்புக்கும் இடையிலான பாலத்தை வெடிகுண்டுகளால் தகர்த்து துண்டித்தனர். துப்பாக்கிகளால் சுட்டபடியே முன்னேறிச் சென்று, சிறைச்சாலையைத் தகர்த்து அங்கு அடைக்கப்பட்டிருந்த நக்சல்பாரி அரசியல் கைதிகள் 341 பேரை விடுதலை செய்தனர். தாழ்த்தப்பட்டோரை நரவேட்டையாடிய ரன்வீர் சேனா எனும் நிலப்பிரபுக்களின் குண்டர்படைத் தளபதிகளில் முக்கிய புள்ளியான படே சர்மா என்பவனை அங்கேயே கொன்றொழித்துவிட்டு, ரன்வீர்சேனாவைச் சேர்ந்த 20 பேரைப் பிணைக் கைதிகளாகப் பிடித்துச்சென்றனர்.

பீகார் மாநிலத்தில் மூன்றாம் கட்ட தேர்தல் வாக்குப்பதிவு அன்று மாலையில்தான் முடிவடைந்திருந்தது. ஜெகன்னாபாத் சிறைக் காவல் பணியில் இருந்த போலீசார், தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்கு அனுப்பப்பட்டிருந்ததால் அன்று சிறையில் பாதுகாப்புக்காக இருந்த போலீசார் 9 பேர் மட்டுமே. இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தாக்குதலை நடத்திய நக்சல்பாரிகள், சிறைச்சாலையை நோக்கி முன்னேறிய போது, ''ஓர் முக்கிய அறிவிப்பு! பொதுமக்களே, நீங்கள் யாரும் வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம். நீங்கள் எங்கள் எதிரிகள் அல்ல. போலீசுக்கும் பண்ணையார்களுக்கும் பாடம் புகட்டப் போகிறோம். ஜெகன்னாபாத் சிறையில் தாக்குதல் நடத்தப் போகிறோம். போலீசுக்காரர்களே, துப்பாக்கிகளைக் கீழே போட்டுவிட்டு ஓடி விடுங்கள்!'' என்று தொடர்ந்து அறிவிப்பு செய்தார்கள்.

அடுத்த சில நிமிடங்களில், துப்பாக்கிக் குண்டுகள் முழங்க ஜெகன்னாபாத் சிறை முற்றுகையிடப்பட்டு, நக்சல்பாரி அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இந்தக் கிளைச் சிறையில் ஏறத்தாழ 140 பேரை மட்டுமே அடைக்க முடியும். ஆனால், சுமார் 650 கைதிகள் மிருகங்களைப் போல இச்சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் நக்சல்பாரி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் என்ன குற்றம் செய்தார்கள் என்று முதல் தகவல் அறிக்கை கூட கிடையாது. சந்தேகத்தின் பேரில் விசாரணைக் கைதிகளாகச் சிறையிடப்பட்டுள்ள இவர்கள் மீது இதுவரை வழக்கு விசாரணையும் நடத்தப்படவில்லை. ஆண்டுக்கணக்கில் எந்த உரிமையுமின்றி பீகார்சிறைகளில் நக்சல்பாரிகள் வதைக்கப்படுகின்றனர். ஜெகன்னாபாத் மட்டுமின்றி, மாநிலமெங்கும் இன்னும் நூற்றுக்கணக்கான நக்சல்பாரிகள் இப்படி பல்வேறு சிறைகளில் வதைபட்டுக் கொண்டிருக்கின்றனர். அதேசமயம், ரன்வீர்சேனா போன்ற நிலப்பிரபுத்துவ குண்டர் படையினருக்கு சிறைச்சாலைகளில் ராஜ உபசாரம் அளிக்கப்படுகிறது. அக்குண்டர்கள் வெளியே இருப்பதற்கும் சிறையினுள் இருப்பதற்கும் வேறுபாடு எதுவும் கிடையாது. எனவேதான், ஆண்டுக்கணக்கில் எவ்வித உரிமையுமின்றி, சிறைகளில் வதைபடும் தமது தோழர்களை விடுவிக்க நக்சல்பாரி போராளிகள் இச்சிறைத் தகர்ப்பை நடத்த வேண்டியது அவசியமாகி விட்டது.



தாக்குதலுக்குப் பிறகு ஜெகன்னாபாத் சிறைச்சாலை:
நக்சல்பாரிகளின் வீரசாகசத்தை அறிந்து திரண்ட கூட்டம்.

தமது தோழர்களை விடுவித்துக் கொண்டு வெளியேறிய நக்சல்பாரி போராளிகள் மீது, சிறையில் காவல் பணியில் இருந்த ஒருசில போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்த, தற்காப்புக்காக நக்சல்பாரிகள் பதிலடி கொடுக்க, இருதரப்பிலும் நான்கு பேர் மாண்டனர். இச்சிறைத் தகர்ப்புச் சம்பவம் நடந்த பிறகு சுமார் பத்து மணி நேரம் வரை போலீசார் இந்தச் சிறை பக்கமே தலைவைத்துப் படுக்கவில்லை. காவல் எதுவுமின்றி சிறைச்சாலை திறந்து கிடப்பதையும் போலீசாரின் 'வீர'த்தையும், பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் படம் பிடித்து வெளியிட்டன. ஒருவழியாக மெதுவாக வந்து சேர்ந்த போலீசாரும் துணை ராணுவப் படைகளும் மாவட்ட அதிகாரிகளும் இதைக் கண்டு ஆத்திரமடைந்து, பத்திரிகையாளர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் தடியடித் தாக்குதல் நடத்தி விரட்டியடித்தனர்.

தப்பிச் சென்ற நக்சல்பாரி போராளிகளையும் அரசியல் கைதிகளையும் பிடிக்க மாநில போலீசுப் படை புழுதியைக் கிளப்பிக் கொண்டு புறப்பட்டது. ஆனால், அவர்களால் கண்டதுண்டமாக வெட்டிக் கொல்லப்பட்ட 8 ரன்வீர் சேனா குண்டர்களின் உடல்களைத் தான் கைப்பற்ற முடிந்தது. பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்ட எஞ்சிய 12 ரன்வீர்சேனாவினர் நக்சல்பாரிகளால் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். மக்கள் கடலில் சங்கமமாகி விட்ட நக்சல்பாரி போராளிகளை இன்னமும் போலீசுப் படையால் பிடிக்க முடியவில்லை.

இந்திய வரலாற்றிலேயே இப்படியொரு சிறைத்தகர்ப்பு நிகழ்ச்சி நடந்ததில்லை. நக்சல்பாரி இயக்க வரலாற்றில் இப்படியொரு வீரசாகச நடவடிக்கை இதுவரை நடந்ததில்லை. வெறுமனே இதுவொரு ஆயுதந்தாங்கிய

### ரன்வீர் சேனா:

## நக்சல்பாரி ஆதரவு தாழ்த்தப்பட்டோரை நரவேட்டையாடும் பயங்கரவாத குண்டர் படை

ஆதிக்க சாதிவெறியர்களான பூமிகார் நிலப்பிரபுக்களின் குண்டர் படையான ரன்வீர்சேனா, பீகாரில் தடை செய்யப்பட்ட அமைப்பாகும். ஆனால், 1994-லிருந்து 2000-வது ஆண்டு வரை 27 இடங்களில் தாழ்த்தப்பட்டோர் மீது பயங்கரவாதக் கொலை வெறியாட்டங்களை நடத்தியுள்ளது. ரன்வீர்சேனா மட்டுமல்ல, நக்சல்பாரி பேரெழுச்சிக்குப் பிறகு, கடந்த 20 ஆண்டுகளில் யாதவ சாதி நிலப்பிரபுக்களின் லோரிக்சேனா, ராஜபுத்திர சாதி நிலப்பிரபுக்களின் குன்வர்சேனா, கங்காசேனா, பார்ப்பன-பூமிகார் சாதி நிலப்பிரபுக்களின் சன்லைட்சேனா என கணக்கற்ற நிலப்பிரபுத்துவ குண்டர் படைகள் கட்டியமைக்கப்பட்டு, உரிமைக்காகப் போராடும் கூலி-ஏழை விவசாயிகள் மீது கொலைவெறித் தாக்குதல்களை நடத்தி வந்தன. இன்று இவை ஒன்று கலந்து பூமிகார் சாதிவெறி பண்ணையார்களால் தலைமை தாங்கப்படும் ரன்வீர்சேனாவாக உருவெடுத்துள்ளது. துப்பாக்கிகளும் அதிநவீன ஆயுதங்களும் கொண்ட இக்குண்டர் படை ஏறத்தாழ 1000-க்கும் மேற்பட்டோரைப் படுகொலை செய்துள்ளது. ரன்வீர்சேனாவுக்குப் புரவலராக இருந்து கட்டி வளர்த்தவர் - பாசிச ஜெயா ஆட்சிக்குப் பக்கமேளம் வாசித்த முன்னாள் தமிழக ஆளுநரான பீஷ்ம நாராயண் சிங்கின் மூத்த சகோதரர் ஆவார்.

சாதிவெறி நிலப்பிரபுக்களின் பயங்கரவாத ரன்வீர் சேனா குண்டர்கள்.




சாதிவெறி பிடித்த நிலப்பிரபுக்களின் ஆதரவோடும் அதிகார வர்க்கத்தின் துணையோடும் போஜ்பூர் - ஜெகன்னாபாத் மாவட்டங்களில் ரன்வீர்சேனா கணக்கற்ற கொலை வெறியாட்டங்களை நடத்தியுள்ளது. 1994 டிசம்பரில் ஜெகன்னாபாத் மாவட்டம் லட்சுமண்பூர்-பதே கிராமத்தில் 61 தாழ்த்தப்பட்டோரை - அவர்கள் உழைதத களைப்பில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த நள்ளிரவு வேளையில், அவர்களின் குரல் வளையையும் நெஞ்சையும் கத்தியாலும் கோடாரியாலும் பிளந்து துடிக்கத் துடிக்கக் கொன்றொழித்தனர். 1999 ஜனவரியில் சங்கர்பிகா கிராமத்தில் 23 பெண்கள் 16 குழந்தைகள் உள்ளிட்டு 58 தாழ்த்தப்பட்டோரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். ''தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் நாளை நக்சலைட்டாக மாறிவிடும்; எனவே தான் இந்த எச்சரிக்கை!'' என்று பகிரங்கமாகவே ரன்வீர்சேனா குண்டர்கள் அப்போது கொக்கரித்தனர்.

லட்சுமண்பூர்-பதே கிராமத்தில் ரன்வீர் சேனா நடத்திய பயங்கரவாதக் கொலைவெறியாட்டத்துக்குத் தலைமையேற்ற படேசர்மா, ஜெகன்னாபாத் சிறையில் அடைக்கப்பட்டிருந்தான். அண்மையில் நடந்த சிறை தகர்ப்பின் போது, இச்சாதிவெறி பிடித்த நிலப்பிரபுத்துவ பயங்கரவாதி, நக்சல்பாரி புரட்சியாளர்களால் கொன்றொழிக்கப்பட்டான். ●

www.padippakam.com

குழுவின் அதிரடி சாகச நடவடிக்கை அல்ல. பெருந்திரளான மக்கள் பங்கேற்புடனும் ஆதரவுடனும் இத்தாக்குதல் நடந்துள்ளது. ஏறத்தாழ 1000 பேர் இத்தாக்குதல் நடவடிக்கையில் பங்கேற்றதாக பத்திரிகைகள் எழுதின. ஆனால், இதில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்கினர்தான் நக்சல்பாரிகளின் மக்கள் கொரில்லா விடுதலைப் படை (PGLA)யினராவர். மற்றவர்கள், நக்சல்பாரி இயக்கத்தை ஆதரிக்கும் உள்ளூர் - சுற்றுப்புற கிராமங்களின் உழைக்கும் மக்கள்!



**இந்திய வரலாற்றிலேயே இப்படியொரு சிறைத் தகர்ப்பு நிகழ்ச்சி நடந்ததில்லை. நக்சல்பாரி இயக்க வரலாற்றில் இப்படியொரு வீரசாகச நடவடிக்கை இதுவரை நடந்ததில்லை.**

நக்சல்பாரி இயக்கம் என்பது ஏதோ விரக்தியுற்ற - வேலையில்லாத இளைஞர்களின் தீவிரவாத எண்ணம் கொண்டோரின் சிறுகுழு என்றும், 100-200 பேரைக் கொண்ட ஆயுதமேந்திய சிறு கும்பல் என்றும் அவதூறு செய்து புளுகிய பத்திரிகைகள், இப்போது 1000 பேர் திரண்டு வந்தார்கள் என்றும், நக்சல்பாரிகளை மக்கள் ஆதரிப்பது விபரீதமானது என்றும் செய்தி வெளியிடுகின்றன.

இந்தியாவில் அதிக மக்கள் தொகை கொண்ட இரண்டாவது மாநிலமான பீகார், சாதிய அரசியலும் கிரிமினல் அரசியலும் கொடிகட்டிப் பறக்கும் மாநிலமாகும். ராஜபுத்திரர், பூமிகார், பார்ப்பனர், குர்மி ஆகிய நிலப்பிரபுத்துவ ஆதிக்க சாதியினர்; அதற்குக் கீழே யாதவர் எனும் பிற்பட்ட சாதியினர்; இவர்களால் ஒடுக்கப்படும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் சேவைத் தொழில் செய்வோர் - என்கிற சாதிய சமூக அடக்குமுறை நீண்ட நெடுங்காலமாக பீகாரில் நீடித்து வருகிறது. ஆதிக்க சாதியினரான நிலப்பிரபுக்கள், தமது ஆளுமைக்கும், அதிகாரத்துக்கும் எதிராக சிறுசலனம் ஏற்பட்டால் கூட, கொலை வெறியாட்டங்களைக் கட்டவிழ்த்து விடுவது சர்வசாதாரணமாக உள்ளது. அதிலும் பாரதிய ஜனதாவுக்கு ஆதரவாக ரன்வீர்சேனா உள்ள நிலையில், அதன் பயங்கரவாதக் கொட்டத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

பீகாரில் கூலி-ஏழை விவசாயிகளான தாழ்த்தப்பட்டோர் தமது உரிமைக்காகப் போராடவோ, சங்கமாக அணிதிரளவோ முடியாது. ஆதிக்க சாதி நிலப்பிரபுக்கள் வைத்ததுதான் சட்டம்; இட்டதுதான் நீதி. அவர்களது பாலியல் வன்முறைகளையோ அடக்குமுறைகளையோ எதிர்த்து வாய் திறக்கக் கூடாது என்கிற நிலப்பிரபுத்து கொடுங்கோன்மைதான் அங்கு நிலவுகிறது. இத்தகைய அடக்குமுறைகளுக்கு எதிராக தாழ்த்தப்பட்டோரையும் கூலி-ஏழை விவசாயிகளையும் பெருமளவில் அணிதிரட்டி உரிமைக்காகப் போராடி வருவது நக்சல்பாரி அமைப்புகள் மட்டும்தான்.

எனவேதான், இத்தகைய நியாயமான போராட்டங்களைத் தீவிரவாதம் என்று சித்தரித்து நக்சல்பாரி இயக்கத்தினரை நரவேட்டையாடுவது, சிறையிலிட்டு வதைப்பது என்பதாக எல்லா ஆட்சியாளர்களும் இந்த விவகாரத்தில் ஓரணியில் நிற்கின்றனர். பீகாரில் சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுவது என்ற பெயரில் நக்சல்பாரி ஆதரவு கிராமங்களில் போலீசு முகாமிட்டு அரசு பயங்கரவாதத்தை ஏவி கூலி-ஏழை விவசாயிகளை மிருகத்தனமாக ஒடுக்கி வருகிறது. ஒருபுறம் அரசு பயங்கரவாத அடக்குமுறை, மறுபுறம் நிலப்பிரபுக்களின் சாதிய - வர்க்கக் கொலைவெறியாட்டங்கள் எனும் இரட்டைக் கொடுங்கோன்மையின் கீழ் சிக்கி பீகார் தவிக்கிறது.

இந்நிலையில், நக்சல்பாரி புரட்சியாளர்களின் இச்சிறை தகர்ப்பு - வீரசாகச நடவடிக்கையானது, போராடும் உழைக்கும் மக்களின் புரட்சிகர உணர்வுக்குப் புதுரத்தம் பாய்ச்சும். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உத்வேகத்தையும் புதிய நம்பிக்கையையும் அளிக்கும். பீகாரின் சிறப்பியல்பு காரணமாகவே, அங்கே இப்படியொரு வீரசாகசத்தை நக்சல்பாரிகளால் சாதிக்க முடிந்தது. அதேசமயம், பீகாரில் நடந்த இத்தகைய சாகச நடவடிக்கையை அப்படியே பெயர்த்தெடுத்து பிற மாநிலங்களில் செயல்படுத்திவிட முடியாது.

பீகாரில் அண்மையில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் லல்லு குடும்ப ஆட்சி முடிவுக்கு வந்து, ஐக்கிய ஜனதா தளம் - பாரதிய ஜனதா கூட்டணி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி, நிதிஷ்குமார் புதிய முதல்வராகப் பொறுப்பேற்றுள்ளார். ஆதிக்கசாதி நிலப்பிரபுத்துவ வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாரதிய ஜனதாவும், பிற்பட்ட - மிகவும் பிற்பட்ட சாதியினரைக் கணிசமாகத் திரட்டிக் கொண்டுள்ள நிதிஷ்குமாரும் கூட்டணி கட்டிக் கொண்டு வெற்றி பெற்றுள்ள போதிலும், நிதிஷ்குமாரால் ஆதிக்க சாதி நிலப்பிரபுக்களின் கைப்பாவையாகச் செயல்படுவதற்கு மேலாக வேறொன்றையும் செய்துவிட முடியாது. லல்லு குடும்ப ஆட்சியில் சற்றே பின்னிலைக்குத் தள்ளப்பட்டிருந்த சாதிவெறி நிலப்பிரபுக்கள், 15 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தமது இழந்த சொர்க்கத்தை மீட்கவும், தமது சமூக - பொருளாதார - சாதிய ஆதிக்கத்தை உறுதிப்படுத்தவுமே கிளம்புவார்கள். ஏற்கெனவே, ரன்வீர்சேனா குண்டர்கள் ஜெகன்னாபாத் சிறைத் தகர்ப்பின் போது கொல்லப்பட்டதைக் கண்டித்து, தீவட்டி ஊர்வலம் நடத்தி எச்சரிக்கை விடுத்த இவர்கள், அடுத்த கட்டமாக தமது தாக்குதலை நக்சல்பாரி ஆதரவு கிராமங்களில் ஏவி தாழ்த்தப்பட்டோரைக் கொன்றொழிக்கத் தயங்கமாட்டார்கள்.

ரன்வீர்சேனா, நக்சல்பாரிகள் - ஆகிய இருதரப்புகளையும் கடுமையாக ஒடுக்கி, இனியும் படுகொலைகள் நடக்காமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று 'தேசிய' பத்திரிகைகள் பீகாரின் புதிய ஆட்சியாளர்களுக்கு உபதேசிக்கின்றன. ஆனால், நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளுக்கும், நிலப்பிரபுக்களின் கொலைகார குண்டர் படைகளுக்கும் இடையே நடக்கும் சாதிய - வர்க்க மோதலை மூடிமறைத்து விட்டு இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எதுவும் காண முடியாது. கிரிமினல் குற்றமாகச் சித்தரிக்கப்படும் — உழைக்கும் மக்களின் விடுதலைக்காகவும் சாதிய-வர்க்க ஒடுக்குமுறைக்கு எதிராகவும் போராடும் நக்சல்பாரிகளின் மக்கள்திரள் சிவப்பு பயங்கரவாதத்தைத் தடுத்து நிறுத்திடவும் முடியாது.

• பாலன்

www.padippakam.com

# வாசகர் கடிதம்

● பாசிச முறையில் பயிற்றுவிக்கப்பட்டு நன்கு அமைப்பாக்கப்பட்டு இயங்கும் சட்டபூர்வ ரௌடிகளின் பாசறைதான் போலீசு துறை என்பதைத் தலையங்கம் விரிவாக விளக்கியது. எந்தக் கோரிக்கைக்காக மக்கள் போராடினாலும் ''சட்டம் - ஒழுங்கு'' என்ற காரணத்தைக் காட்டி அடக்கி ஒடுக்கும் போலீசு துறையையே கலைக்க வேண்டும் என உழைக்கும் மக்கள் இனி போராட வேண்டும்.

– ச. மதியழகன், ஊற்றங்கரை.

● குஷ்பு - தங்கர் விவகாரத்தில் நாம் மையமாக நின்று பேச வேண்டிய களம் எது என்பதை உணர்த்திய கண்ணோட்டமானது, பு.ஜ.வை கைவிளக்காகக் கொண்டு எந்தப் பிரச்சினையையும் அணுக முடியும் என்பதை நிரூபித்துள்ளது. பாலியல் விடுதலையை மட்டும் பெண்களின் பிரச்சினையாகப் பேசி வரும் அ.மார்க்ஸ், சாருநிவேதிதா முதலானோர், தாராளமயத்தின் இன்னொரு ஆபாசமுகம்தான் என்பதை யாவரும் அறியலாம். அதேபோல, தங்கரின் ஆண்டைத்தனத்தை மறைத்துவிட்டு, கற்பு நெறி பற்றி உபதேசிக்கும் தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் பிழைப்புவாத - பித்தலாட்டத்தையும் நடந்தேறி வரும் நிகழ்ச்சிகள் நிரூபித்துக் காட்டுகின்றன. கட்டுரையில் ''கீழ்சாதி'' என்ற சொல்லாடல் நெருடலாக உள்ளது. அதற்குப் பதிலாக தாழ்த்தப்பட்ட / ஒடுக்கப்பட்ட உழைக்கும் பெண்கள் என்று குறிப்பிட்டிருக்கலாம்.

– மணிகோ. பன்னீர்செல்வம்,
நாகம்பட்டி.

*(வாசகத் தோழர் குறிப்பிட்டுள்ளதைப் போன்றே இன்னும் சில தோழர்கள் ''கீழ் சாதி'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்க வேண்டாம் என்றும் அது தவறான பொருள் கொள்வதாகி விடக் கூடும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளனர். தோழர்கள் குறிப்பிட்டுள்ள கருத்து சரியானதென ஏற்கிறோம். எமது கவனக்குறைவால் நேர்ந்துவிட்ட இத்தவறுக்காக சுயவிமர்சனம் ஏற்கிறோம்.*

— ஆசிரியர் குழு)

● குஷ்பு-தங்கர் விவகாரத்தில் குழப்பமாக இருந்த எனக்கு, பு.ஜ. இதழ் சரியான நேரத்தில வெளிவந்து சரியான பார்வையைக் கொடுத்தது. இன்றைய 'தேர்தல்' முறையும் சட்டமன்ற - நாடாளுமன்ற 'ஜனநாயக'மும் எவ்வளவு கேலிக் கூத்தானது என்பதை ''கராத்தே'' விவகாரம் தெளிவுபடுத்திக் காட்டுகிறது.

- மு. பாண்டியன், திருப்பூர்.

● மே.வங்கத்தில் புத்ததேவ் தலைமையில் போலி கம்யூனிஸ்டுகள் புதிய வரலாற்றைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது கம்யூனிச வரலாற்றில் பெரும் துரோகத்தின் அத்தியாயமாகவே இருக்கும் என்பதை பு.ஜ. கட்டுரை எடுப்பாக உணர்த்தியது. திருமாவும் ராமதாசும் பண்பாட்டுத் தளத்தில் ''கற்பு'' என்பதைக் காக்கப் போராடுவதன் மூலம் அடித்தட்டு மக்களை பார்ப்பனமயமாக்கும் சேவையில் இறங்கியுள்ளனர் என்ற புதிய கண்ணோட்டத்தை பு.ஜ. வழங்கியிருப்பது சிறப்பு. திருமாவும் ராமதாசும் ''இந்தியா டுடே''யை எதிர்க்காமல் இருப்பதன் மர்மம் என்ன என்பதை கட்டுரை மூலம் புரிந்து கொள்ள முடிந்தது.

– புரட்சித் தூயன், தருமபுரி.

● குஷ்பு-தங்கர் விவகாரத்தில், ''தமிழ்க் கலாச்சாரம் - பெண்ணடிமைத்தனமற்ற ஒழுக்கம்'' என்ற சொல்லாடல்களுடன் தமிழ்த்தேச கம்யூனிசம் பேசும் கும்பலையும் அம்பலப்படுத்தியிருக்க வேண்டும். சாராம்சத்தில், இந்த கும்பலும் ''கண்ணகி-கற்பு'' என்று அதே பார்ப்பனியத்தைத்தான் தூக்கிப் பிடிக்கிறது. தாராளமயத்தை எதிர்க்காமல், ஒழுக்கநெறி பற்றி உபதேசிக்கும் இத்தமிழின பித்தலாட்டப் பேர்வழிகளையும் தோலுரிக்க வேண்டும்.

- ராஜகுரு, ஈரோடு

● ஸ்டாலின், மாவோ காலத்திய சோசலிச ரஷ்ய-சீன அரசுகளைக் கண்டு குலை நடுங்கிய ஏகாதிபத்தியங்கள், இப்போது மே.வங்க 'இடதுசாரி' ஆட்சியில் குளிர் காய்கின்றன. மறுகாலனியாக்கத்துக்கு 'மனித' முகமூடி மாட்டிவிடும் இடது - வலது போலி கம்யூனிஸ்டுகளின் சிவப்பு முகமூடி கிழித்தெறியப்படாதவரை, தொழிலாளி வர்க்கத்தின் அவலநிலை தொடரவே செய்யும் என்பதை பு.ஜ. எடுப்பாக உணர்த்தி வருகின்றது.

- கதிரவன், சென்னை.

● போலீசின் அதிகார மீறல்களையும் அட்டூழியங்களையும் மூடிமறைத்து, ஏதோ புனிதமான கடமையாற்றுவதாக பார்ப்பன பத்திரிகைகள் சித்தரித்து வரும் வேளையில், எங்கெங்கும் போலீசு அதிகாரமும் ஆதிக்கமும் வேகமாகப் பரவி வருவதை தலையங்கம் எடுப்பாகச் சித்தரித்தது. பீகாரில் அண்மையில் நடந்த சிறை தகர்ப்பையொட்டி ஆட்சியாளர்களும், பத்திரிகைகளும் போலீசுக்கு இன்னும் வரம்பற்ற அதிகாரம் அளிக்க வேண்டுமென கொம்பு சீவி விடும் வேளையில் அதற்குப் பதிலடி கொடுப்பது போல் தலையங்கக் கட்டுரை அமைந்திருப்பது, சிறப்புக்குரியது.

- பிரியதர்ஷினி, சென்னை.

● ஹோண்டா தொழிலாளர்கள் போராட்டம் பற்றிய செய்திகள், நாளேடுகளிலிருந்து மறைந்த பின்னர், அப்போராட்டம் பற்றிய சிந்தனை அன்றாட வேலைகளினூடாக மறந்து போயிருந்த என்னைப் போன்றவர்களுக்கு சாட்டையடி கொடுத்து எழுப்புவதாக பு.ஜ. கட்டுரை அமைந்துள்ளது. மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராக தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் ஓரணியில் திரண்டு புதிய வகைப்பட்ட போராட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதை இக்கட்டுரை உணர்த்தியுள்ளது.

- ஜீவா, சென்னை.

● த.தே.பொ.க.வின் சந்தர்ப்பவாதத்தைத் தோலுரித்துக் காட்டிய ''கலக்கல்'' கட்டுரை சிறப்பு. ம.க.இ.க.வின் அரசியலையும், புரட்சிகர அமைப்புகள் நடத்திவரும் போராட்டங்களையும் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் சரியான பாதை என்று அணிதிரண்டு வருகிறார்கள். ஆனால் த.தே.பொ.க. குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறது. இக்கட்டுரையின் இறுதியில், ம.க.இ.க. மீது த.தே.பொ.க. வைத்துள்ள விமர்சனத்தைப் படித்தவுடன் எங்களுக்குச் சிரிப்புதான் வந்தது.

- சண்முகவேல், சங்கங்குளம்.

● பரபரப்புக்குப் பின் இருட்டடிப்பு செய்யப்பட்ட குர்கான் தொழிலாளர் போராட்டச் செய்தியும் படிப்பினைகளும், இனி தொழிலாளர்கள் எவ்வாறு போராட வேண்டும் என்பதை உணர்த்துகின்றன. ஆள்வது அதிகாரவர்க்கம் தான்; அதை மூடிமறைக்கும் நாடகம்தான் தேர்தலும் சட்டமன்ற - மாநகராட்சிகளும் என்பதை ''கராத்தே'' விவகாரம் மீண்டும் நாடறிய நிரூபித்துக் காட்டிவிட்டது.

- அலாவுதீன், புதுக்கோட்டை.

● பாலியல் உறவுகளைச் சந்தைச் சரக்காக 'இந்தியா டுடே' சித்தரிக்கிறது. எதிர்க்க யாருமற்ற சூழலில், பன்னாட்டுக் கம்பெனிகளின் - பத்திரிகைகளின் விபச்சாரம் தன்னை நியாயப்படுத்துகிறது. ஆணாதிக்கவாதிகளும், பெண்ணியவாதிகளும் மட்டுமல்ல; எதிர்க்கப்பட வேண்டியது சந்தைப் பத்திரிகைகளும் தான்.

- தளபதி சண்முகம், சென்னை.

● 'கற்பு'-க்காகப் போராடும் ராமதாசு - திருமாவின் பித்தலாட்டம் சந்தி சிரிக்கிறது. தமிழன் பண்பாடு என்ற பெயரில் பார்ப்பன பிற்போக்குத்தனத்தையே இவர்கள் நியாயப்படுத்துகிறார்கள்.

- நீலமேகம், வேணாநல்லூர்

● புத்ததேவ் பட்டாச்சார்யாவை அம்பலப்படுத்திய கட்டுரையில் ஜூலியஸ் ஃபூசிக்கின் செம்மொழியோடு தொடங்கியிருப்பது சிறப்பு. குஷ்பு-தங்கர் விவகாரத்தில் பெண்ணியவாதிகளின் பித்தலாட்டங்களை விரிவாக அம்பலப்படுத்தியிருக்க வேண்டும்.

- வாசகர் வட்டம், தஞ்சை.

● ஹோண்டா தொழிலாளர் போராட்டப் படிப்பினை பற்றிய கட்டுரையில், இனி தொழிலாளர்கள் எவ்வாறு போராட வேண்டும் என்று மாற்றுவழியை சுருக்கமாக எழுதியிருக்க வேண்டும். புதிய ஜனநாயகப் புரட்சி அமைப்புகள் மீது புழுதிவாரி இறைத்துக் கொண்டு குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கும் த.தே.பொ.க.வை அம்பலப்படுத்திய 'கலக்கல்' கட்டுரை சிறப்பு. வர்க்கக் கண்ணோட்டமின்றி, பொதுப் பண்பாடு என்ற பெயரில் தனியார்மயம் - தாராளமயத்தை தாங்கிப் பிடிக்கும் இரு தரப்பையும் தோலுரித்துக் காட்டுவதாக குஷ்பு-தங்கர் விவகாரம் பற்றிய கட்டுரை அமைந்துள்ளது.

- வாசகர் வட்டம், ஒசூர்.

www.padippakam.com

## தொல்.திருமாவளவன்:

# ஒரு தலித் என்பதாலா...?

''நான் ஒரு சாமானியன் என்பதால்தான், என் மீது இப்படிப் பழி போடுகிறார்கள். இதையே மேட்டுக்குடியினர் செய்யும்போது என்ன செய்தார்கள்? மேட்டுக்குடிக்கு ஒரு நீதி, சாமானியனுக்கு ஒரு நீதியா?'' - இப்படி தி.மு.க. தலைவர் கருணாநிதி வசனம் பேசுவதைத் தமிழக மக்கள் பல முறை கேட்டிருக்கிறார்கள்.

''நான் ஒரு பெண் என்பதாலேயே என்மீது வீண் பழியும் பொய்யான குற்றச்சாட்டுக்களும் சுமத்தி, அரசியலில் இருந்தே என்னை ஒழித்துக் கட்டுவதற்கு தீய சக்திகள் சதி செய்கின்றன'' - இப்படி அ.தி.மு.க.வின் ஏகபோகத் தலைவி ஜெயலலிதா ஒப்பாரி வைப்பதையும் தமிழக மக்கள் பலமுறை பார்த்திருக்கிறார்கள்.

தங்கள் நிலையை நியாயப்படுத்த முடியாதபோது, வெறுமனே அனுதாபம் தேடிக் கொள்வதற்காக இப்படிப் பேசி, தங்கள் பிறப்பு என்னும் கேடயத்தைக் கையிலெடுத்துக் கொண்டு நழுவிக் கொள்வது இந்த அரசியல் தலைவர்களின் வழக்கமான பாணி.

இதே பாணியில்தான் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல்.திருமாவளவனும் 'அரசியல் பண்ணி'க் கொண்டிருக்கிறார். அவரது தவறுகளை, குறிப்பாக அவருடைய அரசியல் சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளையும், சந்தர்ப்பவாத சாதியக் கூட்டுக்களையும் கேள்விக்குள்ளாக்கினாலே, அவற்றுக்குப் பதில் கூறுவதற்குப் பதிலாக, தான் ஒரு தலித் என்பதாலேயே இவ்வாறு குறை கூறப்படுவதாகச் சித்தரிக்கிறார்.

இவ்வாறு தனது பிறப்பை முன்னிறுத்தித் தன் நிலையை நியாயப்படுத்தும் அவரது முயற்சி, உண்மையில் அவரது நிலைக்கு வலுச் சேர்ப்பதில்லை; மாறாக, அவரது அரசியல், சமூகக் கண்ணோட்டத்தில் உள்ள பல வீனங்களைத்தான் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

ஆதிக்க சாதிவெறியர்களும், தற்போது தொல்.திருமா கூட்டணி வைத்துக் கொண்டுள்ள சாதி அமைப்புகளைச் சேர்ந்தவர்களும்தாம் அவர் ஒரு தலித் என்பதை முன்னிறுத்திப் பேசி வந்திருக்கின்றனர். அவர்கள்தாம் தம் இயல்பிலேயும், தமது சாதியினைத் திரட்டிக் கொள்ளவும் சாதிய ஓட்டு வங்கியை உருவாக்கித் தக்க வைத்துக் கொள்ளவும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது வெறுப்பை உமிழ்பவர்களாகவும் உள்ளனர்.

திருமாவளவனின் பிறந்தநாளையொட்டி வெளியிடப்பட்ட ''தாய்மண்'' சிறப்பிதழில், அவரின் பிறந்தநாளை, தமிழர் எழுச்சி நாளாகப் புகழ்ந்து வெளியிடப்பட்ட விளம்பரம்: தனிநபரைத் துதிபாடுவதன் மூலம் தாழ்த்தப்பட்டோரின் விடுதலையைச் சாதித்துவிட முடியுமா?




தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருமே ஏறக்குறைய உழைக்கும் மக்களாக உள்ள நிலையில், உழைக்கும் மக்களை அணிதிரட்டி அரசியல்-சமூக மாற்றங்கள் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட புரட்சிகர இயக்கங்கள் மட்டுமல்ல; தனியொரு சாதிய ஓட்டு வங்கியை நம்பி அரசியல் நடத்தாத ஓட்டுக் கட்சிகள் கூட யாரையும் சாதிய அடையாளத்தை முன்னிறுத்திக் குறை கூறுவதில்லை.

ஆனால், தொல்.திருமாவளவனோ, தன் நிலையை நியாயப்படுத்த முடியாமல், தனது சந்தர்ப்பவாத அரசியல் தவறுகளை மூடிமறைக்கவும் மட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட மக்களைத் தனக்கு விசுவாசமான ஓட்டு வங்கியாக்கி வைத்துக் கொண்டு, பிற கட்சிகளிடம் பேரம் பேசுவதற்கும்கூடத் தனது சாதி அடையாளத்தை எப்போதும் முன்னிறுத்திக் கொள்கிறார்.

இந்த நோக்கத்துடனேயே, இன்னொரு திரித்துக் கூறும் வேலையையும் தொல்.திருமா செய்கிறார். அதாவது, தொல்.திருமாவளவன் மற்றும் அவரது அமைப்பான விடுதலைச் சிறுத்தைகள் மீதான குற்றச்சாட்டுகள், விமர்சனங்கள் எல்லாமே தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவர் மீதான தாக்குதலாகத் திரித்துச் சொல்லி, தனக்கு ஒரு பாதுகாப்புக் கவசத்தை தேடிக் கொள்ள எத்தணிக்கிறார். இன்னொருபுறம், இப்படிச் சொல்வதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்குமான ஏகபோகப் பிரதிநிதி தானே என்று உரிமை பாராட்டிக் கொள்கிறார். சமீபகாலமாக, தமிழர் தலைவராகப் பிரகடனப்படுத்திக் கொண்ட இவர், ஒட்டு மொத்தத் தமிழர்களின் பிரதிநிதியாகவும் தன்னை முன்னிறுத்திக் கொள்கிறார்.

பல இலட்சம் உறுப்பினர்கள் தம் பின்னால் இருப்பதாக பல ஓட்டுக் கட்சிகளும், நடிகர்களின் ரசிகர் மன்றங்களும் கணக்குக் காட்டுவதைப் போன்


படிப்பகம்

www.padippakam.com

றதுதான் திருமாவளவனின் செய்கையாகும்; சாதி சங்கங்கள்கூட இப்படித்தான், இத்தனை கோடிப்பேர் தம் சாதியினர் என்று உரிமைப் பாராட்டிக் கொள்கிறார்கள். ஏதோ அந்தச் சாதிக்காரர்கள் எல்லாம் அந்த சாதி சங்கங்களின் பின்னால் அணிவகுத்து ஆதரவு தெரிவிப்பது போல நாடகமாடுகிறார்கள்.



திரைப்படக் கதாநாயகர்களின் ''கவர்ச்சி''யை விஞ்சும் வண்ணம், திருமாவளவன் படத்தைப் போட்டு வைக்கப்பட்டுள்ள இரட்டை வாக்குரிமை மாநாட்டு விளம்பரம்: ''தலித் விடுதலை போனது; முதல்வர் நாற்காலி கனவுதான் மிஞ்சி நிற்கிறது'' என்பதற்கு இந்த விளம்பரமே சாட்சி.

தொல்.திருமாவும் அவரது அமைப்பும் தாழ்த்தப்பட்ட சாதிகளிலேயே ஒரு உட்பிரிவு மற்றும் அந்த உட்பிரிவிலும் ஒரு பகுதி ஆதரவை மட்டுமே கொண்டிருக்கிறார்கள். அவர்களும் இவர்களின் எல்லா நடவடிக்கைகளையும் ஆதரிக்கிறார்கள் என்று கூறிவிட முடியாது. அந்த உட்சாதிப் பிரிவுக்குள்ளும் செ.கு.தமிழரசன், சக்தி தாசன், வை.பாலசுந்தரம், லெமூரியன், பாக்கியராஜ், கிருஷ்ணப்பறையனார், சந்திரசேகரன் இன்னும் பல பத்து தன்னார்வத் தொண்டு நிறுவனத் தலைவர்கள் என்றும் உள்ளனர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் ஏக போகத் தலைவர் எனத் தன்னை தொல்.திருமா வேண்டுமானால் கருதிக் கொள்ளலாம். ஆனால், விடுதலைச் சிறுத்தைகளைப் போலவே, தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமே உள்ள மேற்கண்டவாறான அமைப்புகள் மட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட மக்கள், மற்ற பிரிவு மக்களோடு பங்கேற்கும் அமைப்புகளும் உள்ளன. இவ்வாறான அமைப்புகளில் உள்ள ''தாழ்த்தப்பட்ட சாதி உறுப்பினர்கள், பிற சாதியினரின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கின்றனர்'' என்று தொல்.திருமா கொச்சைப்படுத்துகிறார். அவர்கள் சுயசிந்தனை இல்லாதவர்கள் என்பதைப் போலவும், சுயநலனுக்காகக் கட்டுப்பட்டுக் கிடப்பதாகவும் கூறுவது அவர்களைக் கொச்சைப் படுத்துவதை தவிர வேறென்ன?

முதலாளித்துவ ஓட்டுக் கட்சிகளும், செய்தி ஊடகமும் யாரை எளிதில் விலைபேசி வாங்க முடியும் என்று கருதுகிறார்களோ, அந்த அடிப்படையில் தொல்.திருமாவை தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக முன்னிறுத்தித் தள்ளுகின்றன. தேவையான போது பயன்படுத்திக் கொண்டு வீசியெறிந்து விடுகின்றன. அவை முன்னிறுத்தித் தள்ளும்போது ''புகழ் போதை''யில் மயங்கி, ''மூப்பனார் ஒரு புரட்சித் தலைவர்'', ''ஜக்கி வாசுதேவ் சாமியார் மார்க்சைப் போன்றவர்'' என்றெல்லாம் உளருவதும், ஒதுக்கித் தள்ளி விடும்போது தாழ்த்தப்பட்ட மக்களை மதிக்காது, சாதி ஆதிக்க உணர்வோடு நடந்து கொண்டார்கள் என்று புலம்புவதுமாக இருக்கிறார், தொல்.திருமா.

இப்படித்தான் 2003 நாடாளுமன்றத் தேர்தலின் போது தி.மு.க. கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைச் சேர்த்துக் கொள்ள கருணாநிதி மறுத்தபோது, ஒரு சுற்று புலம்பித் தீர்த்தார். சாதிக் கட்சியான இராமதாசின் பா.ம.க.வை மட்டும் சேர்த்துக் கொண்டார்களே என்று அரற்றினார். ஆனால், அதே இராமதாசுடனும் முக்குலத்தோர் சாதி அமைப்புத் தலைவர் சேதுராமனுடனும் பின்னர் கை கோர்த்துக் கொண்டார்.

தொல்.திருமாவளவன் மற்றும் அவரது அமைப்பின் மீது ம.க.இ.க. மற்றும் பிற புதிய ஜனநாயகப் புரட்சி அமைப்புகள் வைக்கும் விமர்சனங்கள் எல்லாமே அரசியல் ரீதியானவைதாம். ஆனால், அவற்றுக்குப் பதில் சொல்ல முடியாத தொல்.திருமா தனிப்பட்ட முறையில் அவரைப் பற்றித் தரக் குறைவாக எழுதிவிட்டதாகவும், அவர் தலித் என்பதால்தான் அப்படிச் செய்வதாகவும், ஒட்டு மொத்த தலித் மக்களையும் அப்படிச் செய்து விட்டதாகவும் பிரச்சாரம் செய்தார்.

தேர்தல்களில் பங்கேற்பவர்களைப் பற்றி எவ்வளவு கடுமையாகச் சாடி வந்த தொல்.திருமா, தானே அந்தச் சாக்கடையில் வீழ்ந்துவிட்டபோது அவர் சொன்ன வாசகத்தை அவருக்கே பொருத்தி எழுதினோம். தன்னார்வக் குழுக்களுடன் அவருக்குள்ள உறவைப் பற்றி எழுதினோம். முன்பு கருணாநிதி, ஜெயலலிதா, மூப்பனாருடன், தற்போது இராமதாசு, சேதுராமனுடன் கை கோர்த்துக் கொண்டபோது அவர்களைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவதை விமர்சித்தோம். பார்ப்பனப் பத்திரிகைகளுடன் உறவு வைத்துக் கொண்டு, பார்ப்பன எதிர்ப்பாளராக நாடகமாடுவதை விமர்சித்தோம். ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன பாதந்தாங்கி ஜார்ஜ் பொன்னான்டசை வைத்துக் கொண்டு இந்துக் கலாச்சார எதிர்ப்பு மாநாடு நடத்துவதை விமர்சித்தோம்.

சங்கரராமன் கொலை வழக்கில் சங்கராச்சாரிகள் சிக்கிக் கொண்டபோது, தொல்.திருமாவும் அவரது அமைப்பினரும் அடக்கி வாசித்தார்கள். சங்கராச்சாரியை அவர் சந்தித்தாக புகார் எழுந்த போது, சங்கராச்சாரி சந்திக்கக் கூடாதவர் அல்ல என்று மறைமுக ஆதரவு தெரிவித்தார். சிதம்பரம் கோவிலுக்குப் போய் பரிவட்டம் கட்டிக் கொண்டதைப் பெருமைக்குரியதென்று பீற்றினார். அவ்வப்பொழுது பார்ப்பன-பாசிச ஜெயலலிதாவைப் பாராட்டி நல்லுறவை வளர்த்தார். இப்படிப்பட்ட

www.padippakam.com

# வள்ளுவமாய் வாழும் வளவன்!



**திராவிட இயக்கத் தலைவர்களை விஞ்சும் திருமாவளவனின் இந்தச் சுயவிளம்பரங்கள், அவர்களின் அமைப்புகளில் உள்ள காலில் விழுந்து கும்பிடும் வழக்கத்துக்கு முந்திய நிலையில்தான் நிற்கிறது. விரைவில் அதுவும் நடக்கும் என்றே எதிர்பார்க்கலாம்.**

செய்கைகளை விமர்சித்தோம்.

இந்த விமர்சனங்கள் எதுவும் தொல். திருமா ஒரு தலித் என்பதால் செய்யப்பட்டவை அல்ல. தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் எதிரானவையும் அல்ல. இருந்தாலும் அப்படி இருப்பதாக திருமாவும் அவரது அமைப்பும் தொடர்ந்து பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள். என்ன எழுதினார்கள், என்ன பேசினார்கள் என்ற விவரத்துக்குள் போகாத மூளை சோம்பேறிகளும், அவர்களின் விசுவாசிகளும், ''நம்ம ஆளுக்கு எதிராக ஏதோ எழுதிவிட்டார்கள், பேசிவிட்டார்கள்'' என்ற சொற்பேச்சைக் கேட்டுவிட்டுக் குதிக்கிறார்கள்.

நமது குற்றச்சாட்டுகளுக்கும், விமர்சனங்களுக்கும் பதில் கூறத் திராணியற்ற நிலையில் மேற்கண்டவாறு திசை திருப்புவதோடு, அவற்றுக்கு உள்நோக்கம் கற்பிக்கவும் செய்கிறார்கள். புரட்சி செய்து சாதியத்தை ஒழிப்பதாகக் கூறி தலித் இளைஞர்களை ஏய்த்து பாதுகாப்பும் உணவும் தேடிக் கொண்டிருந்த நக்சல்பாரிகள், இப்போது தொல்.திருமாவால் விழிப்புணர்வு பெற்ற தலித்துக்களால் விரட்டப்படுவதால் ஆத்திரமுற்றுத் தம்மைப் பற்றி கீழ்த்தரமாக(!) எழுதியும் பேசியும் வருவதாக உள்நோக்கம் கற்பிக்கிறார்கள்.

தம்மை விமர்சிப்பவர்கள் மீது உள்நோக்கம் கற்பிப்பதோடு, எதிர்த்தாக்குதல் நடத்தவும் செய்கிறார்கள். இதனால் நட்பு முரண்பாட்டைப் பகை முரண்பாடாக்கும் ஐந்தாம்படை வேலையும் செய்கிறார்கள். அம்பேத்கரைப் போலவே பெரியாரையும் மதித்து நடப்பதாகப் பேசிக்கொண்டே, தொல்.திருமா தனது சித்தாந்த குருவான (!) இரவிக்குமார் எழுதும் - பெரியாரைக் கொச்சைப்படுத்தி, பார்ப்பன-தலித் கூட்டணியை உருவாக்கும் வகையிலான கட்டுரைகளை திருமா பொறுப்பாசிரியராக உள்ள பத்திரிகையில் தொடர்ந்து வெளியிட்டார்.

பெரியாருக்கு எதிராக திருமா-இரவிக்குமார் இணை செய்துவந்த பிரச்சாரத்தைக் கண்டித்து பெரியாரியவாதிகளும், பற்றாளர்களும் நடத்திய அரங்கக் கூட்டத்தில் புகுந்து திருமா விசுவாசிகள் தாக்குதல் நடத்தினர். திருமாவைத் தரக்குறைவாகவும், தாழ்த்தப்பட்ட மக்களை நேரடியாகவும் தாக்கிய ஆதிக்க சாதித் தலைவர்களோடு கூட்டு வைத்துக் கொண்டுள்ள திருமாவும் அவரது விசுவாசிகளும், புரட்சிகர, முற்போக்கு, ஜனநாயக அமைப்புகளைப் பற்றித் தரக்குறைவாகவும், இழிவாகவும் பேசுவதோடு நேரடித் தாக்குதலும் நடத்த விழைகின்றனர். ''தலித் அமைப்பு'' என்று கூறிக் கொள்பவர்களிடம் பகை முரண்பாடு கொள்ளக்கூடாது என்று இவர்கள் அமைதி காப்பதைப் பலவீனமானதென்று கருதுகின்றனர்.

தொல்.திருமாவளவனும் அவரது அமைப்பும் தம்மிடம் உள்ள அரசியல், சித்தாந்தம் மற்றும் பண்பாட்டுத் துறையிலான ஓட்டாண்டித்தனத்தை மூடி மறைக்கவும், அதற்கு ஈடுகட்டவும் தான் மேற்கண்ட தகிடுதத்தங்களில் ஈடுபடுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக விடுதலைதான் தமது இலட்சிய நோக்கம் என்று அவர்கள் ஆரம்ப காலத்தில் கூறிக் கொண்டார்கள். அதற்கான அறிக்கை (நகல்) ஒன்றைப் பின்நவீனத்துவவாதிகளுடன் சேர்ந்து வெளியிட்டனர். அதையும் கிடப்பில் போட்டு விட்டனர்.

''அடங்க மறு! அத்துமீறு!'' என்று முழக்கமிட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் ''அடங்க மறுப்பதும் அத்துமீறுவதும்'' சரியானதுதான். ஆனால், அதுவே அவர்களின் சமூக விடுதலைக்கான ஒருங்கிணைந்த முழுமையான பார்வையோ, வழியோ கொண்டதில்லை. சாதிய ஒடுக்குமுறைகளை எதிர்த்து முறியடிப்பதற்கான எந்தவித அரசியல் - அமைப்புத் தயாரிப்புமின்றி அடங்க மறுத்துப் போராடிய தலித் இளைஞர்கள் ஆதிக்க சாதியினரின் தாக்குதல்கள், அரசு-போலீசின் ஒடுக்குமுறை - பொய்வழக்குகளை எதிர்கொண்டார்கள்.

அரசு-போலீசு ஒடுக்குமுறை - பொய் வழக்குகளில் இருந்து தப்பிப்பதற்கும், அமைப்புப் பிரமுகர்கள் உள்ளூர் அளவில் ''மதிப்பு''ப் பெறவும் தேர்தல் அரசியலில் குதிப்பது என்று முடிவு செய்தார்கள். தேர்தல் அரசியலுக்கு வசதியாகவும் ஆதிக்க சாதிகளின் தாக்குதல்களில் இருந்து 'தப்பிப்பதற்கும்' ''அடங்க மறு! அத்துமீறு!'' என்ற முழக்கத்தைக் கைவிட்டு ''இனி சாதிச் சண்டைகள் கிடையாது!'' என்று அறிவித்து, சாதி அமைப்புகளின் தலைவர்களுடன் கூட்டுச்சேர்ந்தார்கள்.

இந்த முடிவுகளும் நடைமுறையும் ஒடுக்கும் சாதிகளுக்கும் ஒடுக்கப்படும் சாதிக்கும் இடையே ''சாதி அமைதியை'' வேண்டுமானால் ஏற்படுத்தலாம். தொல்.திருமாவைப் போன்று அவரது அமைப்புப் பிரமுகர்கள் சிலரைப் பதவிக்குக் கொண்டு வரலாம். ஆனால், இந்தப் பாதை தலித் மக்கள் மீதான தாக்குதல் - ஒடுக்குமுறைகளை தடுத்து நிறுத்தி விடுமா? இல்லை, அவர்களின் சமூக விடுதலைக்குத்தான் வழிவகுக்குமா? மாயாவதி, ராம் விலாஸ் பாஸ்வான், அதாவலே போன்றவர்கள் என்ன சாதித்தார்கள்?

''வேறு கட்சிகளில் உள்ள தலித்துகள் அந்தக் கட்சிக்குத்தான் விசுவாசமாக இருந்து, தலைவர்கள் சொன்னபடி ஆடி, அடிமைகளாகவே உள்ளனர். தங்களுடையதைப் போன்ற தலித் கட்சிகளில் இருந்தால்தான் தம் மக்களுக்கு விசுவாசமாக இருப்பார்கள்'' என்று சொல்கிறார்கள் திருமாவும் அவரது அமைப்பினரும். ஆனால் மாயாவதி, ராம்விலாஸ் பாஸ்வான் கட்சி எம்.எல்.ஏ.க்கள் என்ன செய்தார்கள்? அமைச்சர் பதவிக்கு ஆசை காட்டியவுடன் பார்ப்பன - பாசிச பா.ஜ.க.வுக்கு

www.padippakam.com

சோரம் போய்விடவில்லையா? துரோகிகளாவும், பிழைப்புவாதிகளாகவும் சீரழிந்து போய்விடவில்லையா?

அதோடு, தலித்துக்களே முதலமைச்சர்களானாலும், இந்த அரசமைப்பில் தலித் விடுதலைக்காக இல்லாவிட்டாலும், சாதி மற்றும் அரசு-போலீசு ஒடுக்குமுறைக்கு எதிராக ஒன்றும் செய்துவிட முடியாது என்பதற்கு மாயாவதியே சான்றாக இருந்திருக்கிறார்.

தற்போது நடக்கும் கூட்டணி அரசியல் விளையாட்டில் ''ஒரு நல்வினை விபத்து'' நடந்து, தொல்.திருமா ஏதாவது பதவிக்கு வந்துவிட்டாலும் வியப்பில்லை. இப்படிப்பட்ட ''விபத்து''க்களால் தலித் மக்களின் வாழ்நிலையில் எந்த மாற்றமும் வந்துவிடாது. ஆனாலும், அதைக் குறிவைத்துத்தான் அரசியல் சூதாட்டத்தில் அவர் காய்களை நகர்த்துகிறார். அம்பேத்கர், பெரியார், இரட்டைமலை சீனிவாசன் போன்றவர்களை தமது வழிகாட்டிகள் என்று தொல்.திருமா கூறிக் கொண்டாலும் மாயாவதி, ராம்விலாஸ் பாஸ்வான், அதாவலே காட்டிய பாதையிலேயே நடைபோடுகிறார். அதையும் விரைவில் எட்டிவிடும் நோக்கத்தோடு, திராவிட இயக்கத்தவர் கடைப்பிடித்த வெறுக்கத்தக்க, கேலிக் கூத்தான தனிநபர் கவர்ச்சி, தனிநபர் துதி - தனிநபர் வழிநாடு மூலம் சாதித்துவிட எத்தணிக்கிறார்.

பேராசிரியர் கல்விமணி புதிய ஜனநாயகப் புரட்சி அமைப்புகளின் சுவரெழுத்துப் பிரச்சாரத்தைக் கேலி செய்ததை, அப்படியே வாந்தி எடுத்தனர் திருமாவும் அவரது விசுவாசிகளும். ஆனால், தமிழகத்தின் வடமாவட்டங்கள், குறிப்பாகச் சென்னை மாநகரச் சுவர்களில் எல்லாம் திருமா, திருமா என்ற ஆளுயரச் சுவர் விளம்பரங்கள்; அவற்றில் அவரது, அவருடைய அமைப்புக் கருத்துக்கள் எதுவும் கிடையாது. ராமா, ராமா, கோவிந்தா, கோவிந்தா என்று கூச்சல் போட்டாலே புண்ணியம் கிட்டும் என்பதைப் போல, சினிமா நாயகர்களின் ''கவர்ச்சி''யை விஞ்சும் பலவித போஸ்களில் திருமாவின் சுவரொட்டிகள், தட்டிகள். அவரே நினைவில் வைத்துக் கொள்ள முடியாத எண்ணிக்கையில் பட்டங்கள், பாராட்டுப் புகழ் பாடுவதற்கென்றே பலவகை கூட்டங்கள் - நிகழ்ச்சிகள். வீரவாள், மலர்கிரீடம், கார்கள் பவனிவர, பூனைப் படையைப் போல கருஞ்சிறுத்தைகள் புடைசூழ பயணங்கள். அவரது பத்திரிகையைப் புரட்டினால் பக்கத்துக்குப் பக்கம் திருமாவின் பலவகை நிழற்படங்கள். தன்னைத் தானே தலித் மற்றும் தமிழர் தலைவராக அறிவிக்கும் அவரே எழுதிய தலையங்கங்கள், சுயபுராணங்கள்.



ஜெயா ஒரு பார்ப்பன - பாசிஸ்டு என்று தெரிந்திருந்தும், அவரது தன்னம்பிக்கையைப் பாராட்டி, அவருடன் நல்லுறவை வளர்க்க முயலுகிறார், திருமா.

திராவிட இயக்கத் தலைவர்களை விஞ்சும் இந்தச் சுயவிளம்பரங்கள், சுயதம்பட்டங்கள், அவர்களின் அமைப்புகளில் உள்ள காலில் விழுந்து கும்பிடும் வழக்கத்துக்கு முந்திய நிலையில்தான் நிற்கிறது. விரைவில் அதுவும் நடக்கும் என்றே எதிர்பார்க்கலாம். மக்களிடம் சொல்வதற்கும், எழுதுவதற்கும் எந்த விசயமும் இல்லாதபோது, இத்தகைய ''கவர்ச்சி''ப் பிரச்சாரங்கள் தாம் செய்ய முடியும்.

ஓட்டுக் கட்சிகள் எல்லாம், தேர்தலுக்குத் தேர்தல் எவ்வளவோ வாக்குறுதிகளை வாரி வழங்குகிறார்கள். அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைப் பற்றி எப்போதும் பேசுவதில்லை. தேர்தல் முடிந்தவுடன் தமது வாக்குறுதிகளைப் பற்றியும் மூச்சுவிடுவதில்லை. அப்படித்தான் தொல்.திருமாவும் அவரது அமைப்பும் சாதிய ஒழிப்பு, தலித் விடுதலை ஆகியவை தமது இலட்சியம் என்று முழங்குகிறார்கள். ஆனால், அதை நிறைவேற்றுவதற்கான வழிவகை என்ன, நடைமுறை என்ன என்று எதுவும் பேசுவதில்லை. இப்படிப்பட்ட கேள்விகள் எழுந்துவிடக் கூடாது என்பதற்காகவே பரபரப்பான அறிக்கைகள் - பேட்டிகள், ஆர்ப்பாட்டங்கள் என்று திசைதிருப்புகிறார்கள்.

தான் தலித் மக்கள் அனைவரின் பிரதிநிதி, தமிழ் மக்கள் அனைவரின் தலைவர் என்று தொல்.திருமா உரிமை பாராட்டிக் கொள்கிறார். வெறுமனே இப்படிச் சொல்வதாலும், தனிநபர் கவர்ச்சி, துதியாலுமே அவ்வாறு ஏற்றுக் கொள்வதற்கு தலித் மக்களும், தமிழ் மக்களும் ஏமாளிகள் அல்ல. தலித்துகளின் பிரதிநிதி, தமிழ் மக்களின் தலைவர் என்ற முறையில் அவர் என்ன செய்தார் என்பதன் அடிப்படையிலேயே ஏற்பார்கள்.

இந்த உண்மைகளைத்தான் நாம் எடுத்துச் சொல்கிறோம். நாம் எழுப்பும் கேள்விகள், முன்வைக்கும் விமர்சனங்களுக்கு பதில் கூறுவதற்கு பதிலாக, தொல்.திருமாவளவன் ஒரு தலித் என்பதாலும், ஒரு தலித் தமிழ் மக்களின் தலைவராக உருவாவதை பொறுக்க முடியாத பொறாமையாலும்தான் தம்மீது ''குறை கூறுகிறார்கள்'' என்று பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள். அவரது விசுவாசிகளும், துதிபாடிகளும் மட்டுமே இத்தகைய பிரச்சாரத்தை ஏற்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களும், தமிழ் மக்களும் ஏற்பதில்லை என்பதுதான் உண்மை.

• ஆர்.கே.

www.padippakam.com

# “காகிதத்தில் மின்னும் நலத்திட்டங்கள்!”

## அடிப்படை வசதிகளை செய்து தரக் கோரி வி.வி.மு.வின் முற்றுகை போராட்டம்

வரப்போகும் சட்டமன்றத் தேர்தலைக் குறி வைத்து பாசிச ஜெயா அரசு கணக்கற்ற கவர்ச்சித் திட்டங்களை அன்றாடம் அறிவித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், இத்திட்டங்கள் எவையும் இதுவரை கிராமப்புறங்களைச் சென்றடைந்ததே கிடையாது. கடந்த தேர்தலின்போது வாக்குறுதி அளித்த திட்டங்களை நிறைவேற்றி விட்டதாக அதிகாரிகளும், ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும், ஊராட்சி மன்றப் பிரதிநிதிகளும் கணக்கு காட்டி ஏப்பம் விட்டதுதான் மிச்சம்.

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய் நல்லூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட சேமங்கலம், தனியாலம்பட்டு, பொய்கை அரசூர் உள்ளிட்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலை போடுதல், காரப்பட்டு கிராமத்தில் இடிந்து விழும் நிலையில் உள்ள குடிநீர் தொட்டியை அகற்றிவிட்டுப் புதிதாக நிறுவுதல், இருவேல்பட்டு கிராமத்துக்குப் போதிய அளவு மின்னழுத்தம் கொண்ட மின்மாற்றி அமைத்தல் - முதலான பல கோரிக்கைகளும் நீண்ட காலமாக கிடப்பில் போடப்பட்டுக் கிடக்கின்றன. இவ்வட்டார மக்கள் பலமுறை மனு கொடுத்தும் கூட இக்கோரிக்கைகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

இதனை அம்பலப்படுத்தி இவ்வட்டாரத்தில் இயங்கும் வி.வி.மு., ''அடிப்படை வசதியின்றிக் கிராமங்கள் தவிக்குது! அம்மாவோட திட்டமெல்லாம் வெறும் பேப்பரில் ஜொலிக்குது!'' என்ற தலைப்பிட்டு துண்டுப் பிரசுரம் வெளியிட்டு, கிராமங்கள் தோறும் பிரச்சாரம் செய்து மக்களைப் போராட்டத்துக்கு அறைகூவி அழைத்தது. மனு கொடுத்து ஏமாந்தது போதும்; இனி அதிகார வர்க்கத்தை முற்றுகையிட்டுப் போராடுவோம் என்று போராட்ட முறையை விளக்கி, திருவெண்ணெய் நல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை அறிவித்தது.




திட்டமிட்டபடி 17.11.05 அன்று வி.வி.மு. தலைமையில், நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள், குழந்தைகளுடன் சுமார் 300 பேர் திரண்டு ஆவேசமாக முழக்கமிட்டுக் கொண்டே ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை முற்றுகையிடத் தொடங்கியதும் போலீசு மறித்து, முன்னணியாளர்களைப் பேச்சு வார்த்தைக்கு வருமாறு கோரியது. வி.வி.மு. தோழர்கள் ஜோதி, ஏழுமலை, அம்பேத்கர் ஆகியோர் உள்ளிட்டு கிராமப் பிரதிநிதிகளும் பங்கேற்ற இப்பேச்சுவார்த்தையில், அதிகாரிகளும் போலீசு ஆய்வாளரும் கலந்து கொண்டனர். கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றுவதாக அதிகாரிகள் எழுத்துப்பூர்வமாக உறுதியளித்தனர். குடிநீர் தொட்டி கட்டவும், குழாய்கள் பொருத்தவும், சாலை அமைக்கவும் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேரில் வந்து பார்வையிட்டு ஆவன செய்வதாகவும் உறுதியளித்தனர்.

இப்போர்க்குணமிக்க போராட்டம் இவ்வட்டார மக்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது. பீதியடைந்த ஆளும் கட்சியினர், ''சாலை அமைக்கவும் குடிநீர் தொட்டி கட்டவும் தொகையைப் பெற்றுத் தந்த எம்.எல்.ஏ. ஞானமூர்த்திக்கு நன்றி! நன்றி!'' என்று சுவரொட்டி விளம்பரம் செய்து தமது பிழைப்புவாத அரசியலைக் காப்பாற்றிக் கொள்ள அலைந்தனர். அரண்டு போன அதிகார வர்க்கமோ, ''போராட்டம் எதுவும் வேண்டாம்; பேசித் தீர்த்துக் கொள்வோம்'' என்று போராட்டத்துக்கு முன்பாக முன்னணியாளர்களிடம் நைச்சியமாகப் பேசிப் பார்த்தது. எவ்விதச் சமரசங்களுக்கும் மயங்காமல் மக்களைத் திரட்டி போர்க்குணத்தோடு வி.வி.மு. நடத்திய இம்முற்றுகை போராட்டம், உறுதியாகப் போராடினால் மட்டுமே நமது உரிமைகளைப் பெற முடியும் என்ற படிப்பினையை மக்களிடம் விதைத்துள்ளது.

*- விவசாயிகள் விடுதலை முன்னணி, திருவெண்ணெய் நல்லூர்.*

# ஊருக்கு நீதி! ஊழியருக்கு அநீதி!

புதிய ஜனநாயகம் இதழில், ''மக்கள் கண்காணிப்பக''த்தை அம்பலப்படுத்தி வெளிவந்த கட்டுரையின் விளைவாகப் பழி வாங்கப்பட்டு, அந்நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டபலரில், ஹென்றி டிபேனின் ஓட்டுநர் திரு. மோகன்குமாரும் ஒருவர். அவரது ஓட்டுநர் உரிமத்தையும் பாக்கி சம்பளத்தையும் தரமறுத்து, 'மனித உரிமைப் போராளி' ஹென்றி டிபேன் அடாவடித்தனம் செய்து வருவதையும் புதிய ஜனநாயகம் செய்தியாக வெளியிட்டிருந்தது.

அதன் பின்னர், திரு.மோகன் குமார் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் (HRPC) தமிழ்நாடு எனும் அமைப்பின் மதுரைக் கிளையை அணுகிச் சட்ட உதவி கோரினார். சட்ட உதவிக்குழு வழக்கறிஞர்கள் பொற்கொடி, வாஞ்சிநாதன் ஆகியோர் முறையான விசாரணையோ, குற்றச்சாட்டோ இல்லாமல் திரு.குமாரை வேலை நீக்கம் செய்திருப்பது சட்டவிரோதமானது என்றும் அவரது ஓட்டுநர் உரிமத்தைப் பறித்து வைத்துக் கொண்டு தர மறுப்பது சட்டவிரோதமானதும் மனித உரிமை மீறலுமாகும் என்றும் மக்கள் கண்காணிப்பகத்துக்கு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினர். அதற்கு பல நாட்களாகியும் பதில் அனுப்பாத நிலையில், திரு.குமார் 26.9.05 அன்று மீண்டும் ஹென்றி டிபேனிடம் தனது ஓட்டுநர் உரிமத்தை தரச் சொல்லி கேட்டுள்ளார். ஹென்றி டிபேனோ, அவரைத் தகாத வார்த்தைகளால் திட்டி, ''இவனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுங்கடா'' என்று தனது ஊழியர்களுக்கு உத்திரவிட்டு அடாவடித்தனம் செய்துள்ளார்.

www.padippakam.com

திரு.குமார் இச்சம்பவத்தைப் பற்றி மனித உரிமைப் பாதுகாப்பு மையத்திடம் தெரிவித்தவுடன், மாவட்டச் செயலாளர் லயனல் அந்தோணிராஜ் மற்றும் பல வழக்கறிஞர்கள் திரண்டு மதுரை-தல்லாகுளம் காவல்நிலையம் சென்று ஆய்வாளரிடம் இச்சம்பவம் குறித்து புகார் அளித்தனர். அதைத் தொடர்ந்து ஆய்வாளரும் போலீசு உதவி ஆணையரும் மக்கள் கண்காணிப்பகத்துடன் தொடர்பு கொண்டு பேசி விட்டு, மறுநாள் வருமாறு கூறி, புகாருக்கு ரசீது கொடுத்தனர்.

மறுநாள், மக்கள் கண்காணிப்பகத்தின் சார்பில், நிர்வாக அலுவலர் என்.என்.செல்வம், வழக்கறிஞர்கள் வின்சென்ட், பன்னீர் செல்வம் ஆகியோர் காவல் நிலையத்துக்கு வந்தனர். ஹென்றி டிபேன் மீது புகார் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் அவர் ஆஜராகாமல் இருப்பது சட்ட ரீதியானது அல்ல என்று மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தினர் வாதிட்டபோது, ''பிரச்சினையைப் பெரிதாக்க வேண்டாம் சார்'', என்று ஆய்வாளர் கேட்டுக் கொண்டு, ஓட்டுநர் உரிமத்தை அவர்களிடமிருந்து வாங்கிக் கொடுத்தார்.

பின்னர் ஹென்றியின் வழக்கறிஞர்கள், ''மற்ற கணக்குகளையும் இங்கேயே முடித்து விடுங்கள்; இங்கேயே பணம் தருகிறோம்'' என்றனர். ஆனால், மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தினர் இதை ஏற்க மறுத்து, சட்டமுறைப்படி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து கணக்குகளை முடித்துக் கொள்வதாகக் கூறி விட்டனர். அதன்பின்னர், திரு.மோகன் குமாருக்கு 1947-ஆம் ஆண்டு தொழிற்தகராறு சட்டப்படி, சம்பள பாக்கி ரூ.36,000 மற்றும் இத்தொகையை இதுவரை வழங்காமைக்குரிய இழப்பீடு உள்ளிட்டு அனைத்தையும் வழங்கக் கோரி மதுரை தொழிலாளர் நல நீதிமன்றத்தில் மனித உரிமை பாதுகாப்பு மையம் சார்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தொடர்ந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தனது ஊழியரிடமே மனித உரிமையையும் ஜனநாயகத்தையும் மதித்து நடக்காத மக்கள் கண்காணிப்பகம், தனது உரிமைப் பயணத்தில் 'பத்தாண்டுகளை கடந்து வந்துள்ளதாகக் கூறிக் கொண்டு கூட்டம் நடத்திக் கொண்டாடிக் கொண்டிருப்பது கேலிக் கூத்து!

*தகவல்: மனித உரிமைப் பாதுகாப்பு மையம் (HRPC), மதுரை.*

# சூளகிரியில் சிறு கடைகள் இடிப்பு! தாராளமயத்தின் இன்னுமொரு தாக்குதல்!

கிருஷ்ணிகிரி மாவட்டத்திலுள்ள சந்தை நகரமான சூளகிரியில் ''போக்குவரத்துக்கு இடையூறு'' என்ற பெயரில் கடந்த நவம்பர் 2-ஆம் நாளன்று நூற்றுக்கணக்கான சிறு வியாபாரிகளின் கடைகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. சூளகிரி மற்றும் சுற்று வட்டார உழைக்கும் மக்களுடன் பின்னிப் பிணைந்திருந்த சிறு வியாபாரிகள் இப்போது வாழ்வை இழந்து வீதியில் வீசியெறியப்பட்டுள்ளனர்.

''சாலையோர ஆக்கிரமிப்பு'', ''போக்குவரத்துக்கு இடையூறு'' என்று ஆட்சியாளர்களும் ஓட்டுக் கட்சிகளும் சொல்லும் காரணம் உண்மையல்ல. அதுதான் காரணமென்றால், ஊராட்சி இச்சிறுகடைகளுக்கு அனுமதி கொடுத்து வரியும் வசூலித்தது ஏன்? மின் வாரியம் மின்சார இணைப்பு கொடுத்தது ஏன்?

ஏழைகளுக்குக் கல்வி இல்லை; ரேசன் அரிசிக்கும் மண்ணெண்ணெய்க்கும் மானியம் இல்லை; இளைஞர்களுக்கு வேலை இல்லை; அரசு ஊழியர்கள்-தொழிலாளர்கள் போராட உரிமையில்லை; உழைக்கும் மக்களுக்கு நாட்டில் வாழத் தகுதியில்லை என்கிற புதிய பொருளாதாரக் கொள்கையின் ஓர் அங்கம்தான் சில்லரை வியாபாரிகள் மீதான இத்தாக்குதல். ஏகாதிபத்திய நாடுகளின் ''வால்மார்ட்'', ''மெட்ரோ'' போன்ற ஏக போக அங்காடிகள், இந்தியாவில் சில்லரை வியாபாரக் கடைகளை நடத்திக் கொள்ள இந்திய அரசு அனுமதி கொடுத்துள்ளது. ஏகாதிபத்திய நிறுவனங்கள் வருவதற்கு முன்னதாக உள்நாட்டு சிறு வியாபாரிகளை விரட்டியடிக்கும் தாக்குதலாகவே இச்சிறுகடைகள் இடிப்பு நடந்துள்ளது. மேலும், நாட்டை மீண்டும் அடிமைப்படுத்தும் இப்புதிய பொருளாதாரக் கொள்கையின் ஓர் அங்கமாக, கச்சாப் பொருட்களையும் சரக்குகளையும் முக்கிய நகரங்களுக்கும் துறைமுகங்களுக்கும் விரைவாகக் கொண்டு சென்று பெருமுதலாளிகளும் அந்நிய நிறுவனங்களும் இலாபமீட்டுவதற்கு ஏற்ப 'வளர்ச்சி' என்ற பெயரில் சாலைகள் அகலப்படுத்தப்படுகின்றன; மேம்பாலங்கள் கட்டியமைக்கப்படுகின்றன; போக்குவரத்துக்கு இடையூறு என்று காரணம் காட்டி சிறுகடைகளும் குடியிருப்புகளும் இடித்துத் தள்ளப்படுகின்றன.



இந்த உண்மைகளை விளக்கி துண்டுப் பிரசுரம் வெளியிட்ட வி.வி.மு.: இதர பிரிவு உழைக்கும் மக்கள், பாதிக்கப்பட்ட சிறுவியாபாரிகளுக்கு ஆதரவாக நிற்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும், வாழ்விழந்த சிறு வியாபாரிகளை அணிதிரட்டி துவளாமல் போராட அறைகூவியும் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு, அடுத்தகட்டப் போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகிறது.

— விவசாயிகள் விடுதலை முன்னணி, சூளகிரி.

www.padippakam.com

## பற்றியெரியும் பாரீஸ் நகரம்:

# நிறவெறி பாசிச அரசியலும் கருப்பின இளைஞர்களின் கலகமும்

பிரான்சு நாட்டின் தலைநகர் பாரீஸ் நகரில் அமைந்துள்ள ஈஃபிள் கோபுரம்; கேன்ஸ் நகரில் நடைபெறும் ஆடம்பரமான சர்வதேச திரைப்பட விழா - இவை போன்ற சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த அடையாளங்களைத் தவிர, பிரான்சு நாட்டைப் பற்றி வேறெதுவும் நம்முள் பலருக்குத் தெரியாது. ஆனால், அந்நாட்டைச் சேர்ந்த கருப்பின இளைஞர்கள் சமீபத்தில் ''குடியரசு''க்கு எதிராக நடத்திய தெருப் போராட்டங்கள், ''நகர்ப்புறச் சேரிகளும், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களும், ஏழ்மையும், வெள்ளை இன வெறியும் நிறைந்தது தான் பிரான்சு; முதலாளித்துவவாதிகள் கொண்டாடுவது போல, அந்நாடு சமத்துவம் நிறைந்த சமூகம் அல்ல'' என்பதைப் பச்சையாக உலகத்தின் முன் தோலுரித்துக் காட்டிவிட்டது.

கடந்த அக்டோபர் 27-ஆம் தேதி பாரீசின் புறநகர் பகுதியான கிளிச்சி சாஸ் போய்ஸில், 15,17 வயதுடைய பௌனா தரோர், ஜியாத் பென்னா என்ற இரு முசுலீம் கருப்பின இளைஞர்கள், உயர் அழுத்த மின்சார மின் அழுத்திக்குள் சிக்கி இறந்து போனார்கள். இவர்கள் இருவரின் மரணம் ஏதோ ஒரு வகையில் போலீசாருடன் தொடர்புடையதாகவே உள்ளது. இவர்கள் இருவரும் இது வரை எந்தக் குற்றத்திலும் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் இல்லை. எனினும், இவர்களுக்கும் போலீசாருக்கும் இடையே என்ன நடந்தது என்பது மர்மமாகவே உள்ளது. மின் அழுத்தியைச் சுற்றி இருக்கும் 4 மீட்டர் உயரமான பாதுகாப்புச் சுவரை, எப்படி இவர்களால் தாண்ட முடிந்தது என்பது கேள்வியாகவே உள்ளது.

இந்த இரு அப்பாவி இளைஞர்களின் மரணம்தான், கருப்பின இளைஞர்கள் மத்தியில், பிரெஞ்சுக் குடியரசுக்கு எதிராக நீருபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருந்த கோபத்தை, வெறுப்பை நகர்ப்புற வன்முறை போராட்டமாக விசிறிவிட்டது. அக்டோபர் மாதம் இறுதியில் தொடங்கி, ஏறத்தாழ இரண்டு வாரங்கள் நடந்த இந்தப் போராட்டத்தில் அரசாங்க அதிகாரத்தின் மையமான போலீசு நிலையங்கள் மட்டுமின்றி, கருப்பின இளைஞர்கள் படிப்பதற்கு இடம் தாராத பள்ளிக் கூடங்கள்; அவர்களுக்கு வேலை கொடுக்க மறுத்த அலுவலகங்கள்; அவர்கள் வாங்கி அனுபவிக்க முடியாத கார்களும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.


இப்போராட்டத்தின் பின்னுள்ள நியாயத்தை வலியுறுத்திப் பேசியிருக்கும் பிரெஞ்சு சமூகவியல் அறிஞர்கள், ''இப்போராட்டம் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே வெடித்திருக்க வேண்டும்'' எனக் குறிப்பிட்டுள்ளனர். அந்த அளவிற்கு பிரான்சு நாட்டில், கல்வி, வேலைவாய்ப்பு எனச் சமூகத்தின் சகல அரங்குகளிலும் கருப்பின மக்களுக்கு எதிரான வெள்ளை நிறவெறி கோலொச்சி வருகிறது.

•••

பிரெஞ்சு போலீசு, கருப்பினத்தைச் சேர்ந்த யாரையும் நடுத்தெருவில், பேருந்தில், புறநகர் ரயில்களில் என எங்கு வேண்டுமானாலும் நிறுத்தி, அவர்களைச் சோதனையிடலாம். ''இந்த அவமானத்தை முதியவர்களான நாங்கள் சகித்துக் கொண்டோம். ஆனால், பிரான்சிலேயே பிறந்து வளர்ந்த கருப்பின இளைஞர்கள் ஏன் சகித்துக் கொள்ள வேண்டும்? அவர்களுக்கு அரபு மொழி தெரியாது; அரபுக் கலாச்சாரம் தெரியாது; பிரெஞ்சு மொழியும், பிரெஞ்சு கலாச்சாரமும் தான் அவர்களுக்குத் தெரியும். இதன் பிறகும்கூட, அவர்கள் இரண்டாதரக் குடிமக்களாக நடத்தப்படுவதற்குக் காரணம் எங்களின் தோலின் நிறம்தான்'' என பிரெஞ்சுக் குடியரசில் வேரோடிப் போயுள்ள வெள்ளை இனவெறியை அம்பலப்படுத்துகிறார் அபுபக்கர் சாலே என்ற முதியவர்.

பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுவிட்டு, நுகர் பொருட்

வெள்ளை நிறவெறியை எதிர்த்து கருப்பின இளைஞர்கள் நடத்திய கலகத்தில் பற்றி எரியும் பாரீஸ் நகரம்.




படிப்பகம்

www.padippakam.com




**இனவெறி பாகுபாட்டைக் கண்டித்து பாரீஸ் நகரில் நடந்த அமைதி ஊர்வலம்.**

களை வீடுவீடாகச் சென்று கொடுக்கும் மிகச் சாதாரண வேலை செய்துவரும் சுலைமான் என்ற இளைஞர், "என்னுடைய பெயரையும் என்னுடைய முகவரியையும் மட்டுமே பார்த்துவிட்டு, எனக்குப் பலர் வேலை கொடுக்க மறுத்திருக்கிறார்கள்" என்கிறார்.

பிரான்சு நாட்டில் வெள்ளை இனத்தைச் சேர்ந்த தொழிலாளி, வருடத்திற்கு 10,500 யூரோ டாலர் எளிதாகச் சம்பாதிக்க முடியும்; அதேசமயம், கருப்பினத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இதில் பாதியளவுக்குக் கூட வருமானம் கிடைக்காது.

பிரெஞ்சுப் பெயர் கொண்ட ஒரு வேலையில்லாத இளைஞர், 100 வேலைகளுக்கு விண்ணப்பம் போட்டால், அவருக்கு 75 இடங்களில் இருந்து நேர்முகத் தேர்வுக்கு அழைப்புக் கடிதம் வரும். அதே சமயம், அரபு பெயர் கொண்ட கருப்பின இளைஞர், 100 வேலைகளுக்கு விண்ணப்பம் போட்டால், அவருக்கு 14 இடங்களில் இருந்து அழைப்புக் கடிதம் வந்தாலே அதிர்ஷ்டம் தான்.

பிரெஞ்சு நாட்டின் மொத்த மக்கள் தொகையில் எட்டில் ஒரு பங்கு பேர் கருப்பின மக்கள். ஆனால், அந்நாட்டின் நாடாளுமன்றத்திலோ, கருப்பினத்தைச் சேர்ந்த ஒருவர் கூட உறுப்பினர் கிடையாதாம் - இப்படி பிரான்சு நாட்டில், நிறத்தின் அடிப்படையில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைப் பட்டியல் இட்டுக் கொண்டே போகலாம்.

•••

இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகு, பிரான்சின் தொழிற்துறை அபாரமாக வளரத் தொடங்கிய நேரத்தில், அத்தொழிற்சாலைகளில் குறைவான கூலிக்கு வேலை செய்வதற்காக, பிரெஞ்சு அரசு தனது முன்னாள் காலனி நாடுகளில் இருந்து கருப்பின மக்களையும், அரேபியர்களையும் புலம் பெயரச் செய்தது. வெள்ளையர்கள் செய்ய விரும்பாத வேலையைச் செய்வதற்காகப் புலம் பெயர்ந்து வந்த இக்கருப்பின மக்களுக்கு பிரெஞ்சுக் குடியுரிமை வழங்கப்பட்டதோடு, அவர்கள் வசிப்பதற்கு தொழிற்சாலைகளை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. கருப்பினக் குழந்தைகள் படிப்பதற்குத் தனி பள்ளிக்கூடங்கள்; வழிபாடு நடத்துவதற்கு தேவாலயங்கள், மசூதிகள்; மற்றும் விளையாட்டுத் திடல்கள், நுகர்பொருட்களை விற்பனை செய்யும் கடைகள் கூட கட்டிக் கொடுக்கப்பட்டன. எனினும், கருப்பின மக்கள் வாழும் பகுதி வெள்ளையர்களோடு கலந்து விடாத தனியொரு உலகமாகவே உருவாக்கப்பட்டது.

**பாரீசில், கேவலமான நிலையில் பல இலட்சக்கணக்கான மக்கள் வாழ்வதைக் கண்டு கொள்ளாத வெள்ளை இன மக்கள் இந்த வன்முறைப் போராட்டங்களைக் கண்டிக்கும் தார்மீக உரிமையையும் இழந்து விடுகிறார்கள்.**

தற்பொழுது பிரான்சு நாடெங்கும் பரவிக் கிடக்கும் எழுநூறுக்கும் அதிகமான புறநகர் பகுதிகளில், ஏறத்தாழ 40 இலட்சத்துக்கும் மேற்பட்ட கருப்பின மக்கள், இரண்டு தலைமுறைகளாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு பிரெஞ்சு குடியுரிமை வழங்கப்பட்டிருந்தாலும்; நிறப் பாகுபாடு காட்டுவது சட்டப்படி தடை செய்யப்பட்டிருந்தாலும், வெள்ளையர்கள் வசிக்கும் நகரமும், கருப்பின மக்கள் வாழும் புறநகர் பகுதியும் நம்நாட்டு "ஊரும்", "சேரியும்" போலவே பிரிந்து கிடக்கிறது.

பிரான்சு நாட்டின் இன்றைய அழகிய தோற்றத்தை நிர்மாணிக்க இறக்குமதியான இந்தக் கருப்பின அரை அடிமைக் கூலிகள், நவீன நிர்மாணங்கள் பூர்த்தியானதைத் தொடர்ந்து வேண்டாத கூலிகளாக மாற்றப்பட்டனர். குறிப்பாக, 1990-க்குப் பின் பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்டு, மீள வழி தெரியாமல் முழிக்கும் பிரெஞ்சு ஏகாதிபத்தியம், அந்நெருக்கடியின் சுமையை கருப்பின மக்களின் மீது ஏற்றி வைத்து வருகிறது. புலம் பெயர்ந்து வந்த கருப்பின மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த சமூகப் பொருளாதாரச் சலுகைகள் ஒன்றன் பின் ஒன்றாக நிறுத்தப்படுவதோடு, படித்த கருப்பின இளைஞர்கள் மத்தியில் வேலையில்லா திண்டாட்டம் 40 சதவீதமாக அதிகரித்துவிட்டது. இதற்கு ஏற்ப உள்நாட்டு ஓட்டுச் சீட்டு அரசியலிலும், கருப்பின முசுலீம்களுக்கு எதிரான வெள்ளை

www.padippakam.com

இனவெறியும், முசுலீம் மத எதிர்ப்பும் செல்வாக்கு பெற்று வருகிறது.

கருப்பின மக்கள் வாழ்ந்துவரும் புறநகர்ப் பகுதிகளைக் குற்றங்களின் பிறப்பிடமாகவும்; கருப்பின மக்களைக் குற்றப் பரம்பரையாகவும் பார்க்கும் அளவிற்கு, நிறவெறி பாசிச அரசியல் கருத்துகள் வெள்ளை இன மக்கள் மத்தியில் வேரூன்றி வருகின்றன.

•••

பிரெஞ்சு குடியரசாலேயே நடைமுறைப்படுத்தப்படும் இந்த வெள்ளை இனவெறி பாசிச அரசியல், ''கருப்பின இளைஞர்கள் சிலர் மாஃபியா கிரிமினல் கும்பல்களில் இணைந்து சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவது; கருப்பின முசுலீம்கள் மத்தியில் முசுலீம் தீவிரவாதம் ஊடுருவி வருவது'' ஆகியவற்றைக் காட்டி நியாயப்படுத்தப்படுகிறது. மேலும், கருப்பின இளைஞர்களின் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவது என்ற பெயரில் இந்த இனவெறி அரசியல் வளர்த்து எடுத்துச் செல்லப்படுகிறது.

பிரான்சிலேயே பிறந்து வளர்ந்த இன்றைய கருப்பின இளம் தலைமுறை, தங்களது பெற்றோர்களின் கட்டுக் கோப்பை - பிழைப்புக்காக வெள்ளை நிறவெறியைச் சகித்துக் கொள்ளுதல்; பழைய பிற்போக்கு பண்பாட்டுக் கூறுகள் போன்றவற்றை ஏற்க மறுக்கின்றனர். வெள்ளை இனத்தவரின் திட்டமிட்ட இன ஒடுக்குமுறையும் இந்தக் கருப்பின பிரெஞ்சு இளைஞர்களைப் புறக்கணித்து, தனித் தீவாக்கி விட்டது. கல்வி ரீதியாகவும், வேலை வாய்ப்பு ரீதியாகவும் இவர்களைப் புறக்கணிக்கும் வெள்ளை நிறவெறிக் கொள்கை, கருப்பின இளைஞர்களை எவ்வித நோக்கமும் இன்றி வீதிகளில் சுற்றித் திரியும் அராஜகவாத உதிரிக் கும்பலாக மாற்றி வருகிறது. பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தால் சமூகத்தின் பொதுப் பண்பாடாக ஊட்டி வளர்க்கப்படும் நுகர்வுவெறி கலாச்சாரம், ''லும்பன்''களாகத் தெருக்களில் சுற்றும் கருப்பின இளைஞர்களை வன்முறைக் கும்பலாகவும் மாற்றுகிறது. இதனால் தான், பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் நிறவெறிக்கு எதிராக வெடித்த கருப்பின இளைஞர்களின் கோபம், இலக்கற்ற, நகர்ப்புற வன்முறை போராட்டமாக நடந்து முடிந்தது. தமது வாழ்வை இழந்து எரிந்து கிடக்கும் சமூகம், தான் நுகர முடியாத, தனக்கு எதிரான அனைத்தையும் எரித்து ஓய்ந்தது.




**வெள்ளை நிறவெறியைத் தூண்டிவிட்டு, பிரான்சு அதிபர் தேர்தலில் வெற்றி அடைந்துவிடத் திட்டம் போட்டு வரும் உள்துறை அமைச்சர் நிகோலாஸ் சர்கோஸி (இடது) மற்றும் பிரான்சில் வளர்ந்து வரும் தேசிய முன்னணி என்ற நவீன நாஜிக் கட்சியின் தலைவர் லீ-பென்.**

நம் நாட்டு 'தேசிய' அரசியல்வாதிகள் ஓட்டுப் பொறுக்க முசுலீம் எதிர்ப்பு தீவிரவாத அபாயத்தை ஊதிப் பெருக்குவது போலவே, நிறவெறி பிடித்த பிரெஞ்சு ஓட்டுக் கட்சி தலைவர்கள் ''வன்முறையைக் கட்டுப்படுத்துவது'' என்ற முழக்கத்தின் அடிப்படையிலேயே தேர்தல் உத்திகளை வகுத்துக் கொள்கின்றனர். வன்முறையைக் கட்டுப்படுத்துவது என்பது பிரெஞ்சு சமூகத்தில் நடைபெறும் அனைத்து வன்முறைகளையும் கட்டுப்படுத்துவது அல்ல. வெள்ளை இனத்தவர் அல்லாத வெளிநாட்டவர் ஈடுபடும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் நிறவெறிக் கொள்கையே ஆகும். இந்த அடிப்படையில், தற்போது கருப்பின இளைஞர்கள் நடத்திய தன்னெழுச்சியான போராட்டத்தையும், நிறவெறி பாசிச அரசியலை ஊதிவிடுவதற்கு பிரெஞ்சு ஆளும் கும்பல் பயன்படுத்திக் கொண்டது.

2007-இல் நடைபெறவுள்ள பிரெஞ்சு அதிபர் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புள்ள தலைவர் எனக் கூறப்படும் தற்போதைய உள்துறை அமைச்சர் மந்திரி நிகோலஸ் சர்கோஸி, கருப்பின மக்களை, ''வீட்டு மதில் சுவரில் படிந்துள்ள பறவைகளின் எச்சங்கள்; இந்த எச்சங்களைத் துடைத்தெறியாமல் விடமாட்டேன்'' என இழிவுபடுத்தி பேசி, கலவரம் தொடங்குவதற்கு நெருப்பைப் பற்ற வைத்தார். மேலும் அவர், பாரீசின் புறநகர் பகுதிகளில் அமைந்துள்ள போலீசு நிலையங்களுக்குப் போய், கருப்பின குற்றவாளிகள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி விசாரணை நடத்தி, தன்னை வெள்ளை இனத்தின் இரட்சகனாகக் காட்டிக் கொண்டார்.

சர்கோஸியோடு அதிபர் தேர்தலில் நிற்க போட்டி போடும், தற்போதைய பிரதமர் டொமினிக் டி வில்லிபன், கலவரத்தை ஒடுக்க, 1955-ஆம் ஆண்டில் போடப்பட்ட ஒரு பழைய ஒடுக்குமுறை சட்டத்தைத் தூசி தட்டி எடுத்தார். இந்தச் சட்டம், பிரான்சின் காலனியாக இருந்த அல்ஜீரியாவில் நடந்த சுதந்திரப் போராட்டத்தை ஒடுக்குவதற்காகவே உருவாக்கப்பட்டது. இந்த பிரெஞ்சு மேலாதிக்க சட்டத்தைக் கையில் எடுத்ததன் மூலம், அவர் வெள்ளை இன வெறியர்களின் ஆதரவைப் பெற முயன்றார். மேலும், கருப்பின மக்கள் வாழும் புறநகர் பகுதி மேயர் நினைத்தால் அந்தப் பகுதிகளில், அடுத்த மூன்று மாத காலத்திற்கு அவசர கால ஆட்சியை நடைமுறைப்படுத்தலாம் என்ற சட்டபூர்வ பாசிச அடக்குமுறையையும் கருப்பின மக்கள் மீது திணித்தார்.

இக்கலவரத்தை ஒடுக்க பிரெஞ்சுக் குடியரசு தூசி தட்டி எடுத்த கருப்புச் சட்டத்தின் கீழ், 2,500-க்கும் மேற்பட்ட கருப்பின இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுள் பெரும்பாலோர் பதின் வயதைத் தாண்டாத சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பாரீசின் புறநகர் பகுதிகளில் துர்நாற்றம் வீசும் அடுக்குமாடி குடியிருப்புகளைப் பார்த்தாலே, அவ்வீடுகளில் எலியோடும், கரப்பான் பூச்சியோடும் குடித்தனம் நடத்தும் கருப்பின மக்களின் வாழ்க்கை, எவ்வளவு கேவலமாகச் சிதைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். பிரெஞ்சு சமூகம், இந்த வெள்ளை இனவெறி அநாகரிகத்தைக் கண்டித்துப் போராடாத வரை, கருப்பின இளைஞர்களின் இலக்கற்ற வன்முறை போராட்டத்தைத் தடுத்துவிட முடியாது. இது மட்டுமல்ல, நாகரீகமான பாரீசில், கேவலமான நிலையில் பல இலட்சக்கணக்கான மக்கள் வாழ்வதைக் கண்டு கொள்ளாத சமூகம், இந்த வன்முறைப் போராட்டங்களைக் கண்டிக்கும் தார்மீக உரிமையைக் கூட இழந்து விடுகிறது.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்திற்காக நடந்ததுதான் பிரெஞ்சு புரட்சி. அக்குறிக்கோள்களை பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் குழிதோண்டி புதைத்து விட்டனர் என்பதை கருப்பின மக்களின் போராட்டம் உலகிற்கு எடுத்துக் காட்டி விட்டது.

**• செல்வம்**

*தகவல் உதவி: பி. இரயாகரன், பாரீஸ்.*


படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை அதிபர் தேர்தல்:
# சிங்கள இனவெறிக்கு மீண்டும் வெற்றி!

நடந்து முடிந்த இலங்கை அதிபர் தேர்தலில் ஜனதா விமுக்தி பெரமுணா என்ற போலி புரட்சி - சிங்கள இனவாத கட்சியுடனும் ஜாதிகா ஹெல உருமயா என்ற பௌத்தமத குருமார்களின் பேரினவாத-பாசிசக் கட்சியுடனும் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர அணியின் பிரதிநிதியாகிய மகிந்தா ராஜபக்சே மிகக் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். இலங்கையை நீண்டகாலமாக ஆண்டுவரும் பண்டாரநாயகே குடும்பத்துடன் சேர்ந்து இலங்கை சுதந்திர கட்சியை நிறுவிய சிங்கள இனவெறி அரசியல் தலைவர் ராஜபக்சேயின் வாரிசுதான் இந்த மகிந்தா ராஜபக்சே. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ரணில் விக்ரமசிங்கே, நீண்டகாலமாக ஈழத் தமிழர்களை படுகொலை செய்து வந்த சிங்கள-பாசிச வெறியர்களான ஜெயவர்த்தனே - பிரேமதாசாவைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்கு வந்து பிரதம மந்திரியாக பதவி வகித்தவர்.

''நடைபெறும் தேர்தலில் போட்டியிடும் ரணில் மற்றும் மகிந்தா இருவருமே தோற்கடிக்கப்பட வேண்டிய துரோகிகள் - எதிரிகள்; ஆகவே தேர்தலைப் புறக்கணியுங்கள்'' என்ற விடுதலைப் புலிகளின் நிலை காரணமாக ஈழத்தமிழர்கள் மிகப் பெரும்பாலும் வாக்களிக்காதபோது, சிங்கள - பௌத்த பாசிசக் கட்சிகளின் வேட்பாளரான மகிந்தா வெற்றி பெற்றதில் வியப்பொன்றும் இல்லை. ஆனால், இரண்டு சதவிகித வாக்குகள் வித்தியாசத்தில் மட்டுமே ரணில் தோற்றுப் போயுள்ளார். நாட்டின் மொத்த வாக்காளர்களில் பாதிக்கும் மேல் 0.29 சதவீத வாக்காளர்களே மகிந்தாவை ஆதரித்துள்ளனர். சிங்கள மக்களில் ஒரு பெரும் பகுதியினர் உட்பட ஏறக்குறை பாதியளவுக்கான இலங்கை மக்கள் இன்னமும் போர் நிறுத்தம் - பேச்சு வார்த்தை - அமைதித் தீர்வு ஈழப் பிரச்சினைக்கான வழி என்று நம்புவதையே இது காட்டுகிறது.



வெற்றியைக் கொண்டாடும் மகிந்தாவின் குடும்பம்.

அதனால்தான், தேர்தல்களின் போது, இலங்கையின் மீது அந்நிய ஆதிக்கம், நாடு துண்டாடப்படுவது ஆகிய ஆபத்துக்களுக்கு எதிராகவும், ஈழப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணப் போவதாகவும் கூறி ஓட்டுப் பொறுக்கிய மகிந்தா, இப்போது ''விடுதலைப் புலிகளுடன் மட்டுமல்ல; நாட்டின் அனைத்துப் பிரிவினரும் பங்கேற்கும் அமைதி பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவேன், அவர்களின் உரிமைகளையும், விருப்பங்களையும் உறுதி செய்வேன்; சர்வதேச சமுதாயம் அதற்கு உதவவேண்டும்'' என்கிறார். ஆனால், அதற்கான முன்நிபந்தனையாக ''விடுதலைப் புலிகள் பிரிவினைவாதத்தைக் கைவிட வேண்டும், ஆயுதங்களை களைய வேண்டும், ஜனநாயக நீரோட்டத்தில் கலக்க வேண்டும், ஒரு இறுதித் தீர்வுக்கான பேச்சுவார்த்தை நடத்தி அதை அமலாக்கவும் வேண்டும்'' என்று மகிந்தாவின் தேர்தல் அறிக்கை கூறுகிறது. சிங்கள - பௌத்த பாசிச கூட்டணியின் இந்த ஆட்சியில் இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு என்பது கானல் நீரே!

இந்த ஆண்டு மாவீரர் நினைவு நாளில் பேசிய விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், ''இவ்வாண்டு இறுதிக்குள் மகிந்தா அரசு ஈழப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும். ஈழத் தமிழர்கள் குறைந்தபட்சம் ஒரு பிராந்திய தன்னாட்சி அதிகாரத்தை பெற விரும்புகிறார்கள். சந்திரிகா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பங்கேற்கும் சுனாமிக்குப் பிந்தைய நடவடிக்கைகளுக்கான கட்டுமான நிர்வாக அமைப்பு (PTOMS) ஒன்றை சர்வதேச ஒத்துழைப்புடன் சுனாமி பாதிப்பு பகுதிகளின் மறுசீரமைப்புக்காக நிறுவப்பட்டது. அதை செயலிழக்கச் செய்ததன் மூலம் தற்போதைய ஆளும் கூட்டணியினர் பங்கு பெறும் ஜே.வி.பி. மற்றும் உருமயா ஆகிய அமைப்புகள் தமிழ் மக்களின் கடைசி நம்பிக்கையை குலைத்து விட்டனர். இந்த நிலையில் புதிய அரசு அமைதிப் பேச்சு வார்த்தைக்கான தனது திட்டத்தை உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று அவசர மற்றும் இறுதி எச்சரிக்கை செய்கிறோம்'' என்று அறிவித்துள்ளார்.

புலிகளின் இந்த அறிவிப்பு எதிர்பார்த்ததை விட இறங்கி வந்திருப்பதாகவே சிங்கள அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். இதை விடக் கடுமையாக மிரட்டும் தொணியிலேயே அவர் எச்சரிக்கை விடுப்பார் என்று சிங்கள கடுங்கோட்பாட்டுவாதிகள் எதிர்பார்த்தனர். ஆனால், பிரபாகரனின் இந்த வேண்டுகோள் அமைதி முயற்சி தொடர வேண்டும் என்பதை விரும்புவதாகவே தெரிகிறது. புதிய அரசு இதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஏற்கெனவே அமலில் இருக்கும் போர் நிறுத்த ஒப்பந்தம்-அமைதிப் பேச்சு வார்த்தை, சுனாமி பாதிப்பு நிவாரணப் பணிகளுக்கான கூட்டு முயற்சி ஆகியவையெல்லாம் அமெரிக்கா உட்பட ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளின் நிர்ப்பந்தம் காரணமாக இருதரப்பும் ஏற்றுக் கொண்டு நடைமுறைக்கு வந்தவை. தற்போது அத்தகைய முயற்சிகளுக்கு எத்தரப்பு தடையாக இருந்து தகர்க்கிறது என்று ஒருவருக்கு எதிராக மற்றவர் குற்றஞ்சுமத்தி உதவி தரும் நாடுகளின் நம்பிக்கையை பெறுவதே அவர்களின் நோக்கமாக இருக்கிறது. இந்த நிலையில் மீண்டும் ஒரு போர் என்பது இரு தரப்புமே விரும்பாததாகவே அமையும். சிங்கள-பௌத்த பாசிச கூட்டணியின் சார்பில் ஆட்சிக்கு வந்திருக்கும் மகிந்தா அவர்களின் நிர்பந்தத்திற்கு பணிந்து போர்த் தயாரிப்புகளுக்கே முதலிடம் தருவார். இதற்கிடையே பேச்சுவார்த்தை நாடகத்தை நடத்தவும் எத்தனிப்பார். அமெரிக்க மேலாதிக்கத்தின் கீழ் உலகமயமாக்கம் - தாராளமயமாக்கம் என்பதை ஏற்றுக் கொண்டுள்ள விடுதலைப் புலிகளும் சர்வதேச நிர்ப்பந்தத்தின் காரணமாக இதே போன்ற ஒரு நாடகத்தை நடத்தலாம்.

● சுப்பு

www.padippakam.com

## ராமன்குட்டி மணியப்பன் கொலை:

# பலிகிடாவாக்கியது இந்திய அரசே!

கேரள மாநிலம், ஆலப்புழா மாவட்டம் சிங்கோலி கிராமத்தைச் சேர்ந்த இராமன் குட்டி மணியப்பன், ஆப்கானிலுள்ள தாலிபான் தீவிரவாதிகளால் கடந்த மாதம் கடத்தப்பட்டு கொடூரமான முறையில் கழுத்தை அறுத்துக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் நாடு முழுவதும் பெரும்பாலான மக்களிடையே அனுதாபத்தையும், கேரள மாநிலம் முழுவதும் துக்கத்தையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்திவிட்டது.

இத்தகைய உணர்வலைகள் தன்னெழுச்சியாக ஏற்பட்டவையும் அல்ல; இராமன்குட்டி மணியப்பன் கொலை சம்பவம் மட்டுமே இதற்குத் தூண்டுதலாக அமைந்துவிடவும் இல்லை. சாவுச் செய்திக்காகக் காத்திருக்கும் தொழில்முறை ஒப்பாரிக் கிழவிகளைப் போலச் செய்தி ஊடகம், இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்திக் கொண்டது. இந்திய அரசோ, தனது அமெரிக்க மேலாதிக்க ஆக்கிரமிப்பு மற்றும் போர்வெறிக்கு ஊழியம் செய்யும் அயலுறவுக் கொள்கைக்குக் கிடைத்த பதிலடிதான் மணியப்பன் கொலை என்பதை மூடிமறைக்கிறது; இதற்காக, தாலிபான் பயங்கரவாதிகளின் மிருகத்தனமான கொலைவெறிதான் இக்கொலைக்குக் காரணம் என்றும், பாகிஸ்தான் உளவு நிறுவனம் தாலிபானுக்குப் பின்னணியில் இருந்து தூண்டிவிட்டிருக்கிறது என்றும் ஒரு கருத்தை உருவாக்கி தேசியவெறியைப் பரப்பி ஆதாயம் தேடுகிறது.

ஆண்டுக்கு 400 கோடி ரூபாய் அன்னியச் செலாவணியை ஈட்டித்தரும் 19 இலட்சம் மலையாளிகள் வெளிநாடுகளில் வேலை செய்கிறார்கள். அவர்களில் ஏறக்குறைய 15 இலட்சம்பேர் "போரும் பயங்கரவாதத் தாக்குதல்களும்" நிறைந்த பதற்ற பூமியான மத்திய கிழக்கு இசுலாமிய நாடுகளில் உள்ளனர். உலகின் மோதல்கள் நிறைந்த பகுதிகளில் பணியாற்றும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட மக்கள் எத்தகைய ஆபத்தை எதிர்கொள்கிறார்கள் என்று எச்சரிக்கும் வகையில் மணியப்பன் கொலை சம்பவம் அமைந்திருக்கிறது. "தங்கள் மக்கள் யுத்த பூமியில் பீரங்கிக் குண்டுகளாகப் பயன்படுத்தப்படுகிறார்கள்" என்றுதான் கேரள மக்கள் கொந்தளிக்கிறார்கள்.

ஈராக்கில் 2004 ஜூலையில் மற்ற ஆறு பேருடன், மூன்று இந்தியர்களை "இசுலாமியத் தீவிரவாதிகள் கடத்தித் தலையைத் துண்டித்துக் கொலை செய்யப் போவதாக எச்சரித்தார்கள்; அப்போது தலையிட்டு, பேச்சுவார்த்தைகள் நடத்தி, சாவின் பிடியில் இருந்து இந்திய அரசு அவர்களை மீட்டது; அதைப் போன்று மணியப்பன் கடத்தப்பட்டபோது இந்திய அரசு செயல்பட்டிருந்தால் அவரை மீட்டிருக்கலாம்" என்று கேரள மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

"மணியப்பனைக் கடத்திய தாலிபான் பயங்கரவாதிகள், அதற்கான வாய்ப்பே தராமல் கழுத்தை அறுத்துக் கொன்று, ஒரு சிறு குறிப்புடன் சாலையில் வீசிவிட்டனர்" என்று கூறித் தனது பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்கு இந்திய அரசு முயல்கிறது. தாலிபான் இயக்கத்திற்கு எதிராக ஆத்திரமூட்டும் செய்கைகள் எதையும் தனிப்பட்ட முறையில் மணியப்பன் செய்து விடவில்லை. ஆப்கான் நாட்டுக்கும் மக்களுக்கும் குறிப்பாக தாலிபான் இயக்கத்துக்கும் எதிரான ஆத்திரமூட்டும் அயலுறவுக் கொள்கைகளை இந்திய அரசுதான் கடைப்பிடித்து வருகிறது. அதற்குத்தான் மணியப்பன் காவு கொடுக்கப்பட்டிருக்கிறார்.

•••

கடந்த இரண்டு பத்தாண்டுகளுக்கும் மேலாக, அடுத்தடுத்து ஆப்கானை ஆக்கிரமித்து நிறுவப்பட்ட பொம்மை ஆட்சியாளர்களை இந்திய அரசு ஆதரித்து வந்திருக்கிறது. ஆப்கானை ஆண்டுவந்த மன்னராட்சியை இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் தூக்கியெறிந்து, நஜிபுல்லா என்ற போலி கம்யூனிஸ்டு தலைமையில் ஒரு பொம்மை அரசை சோவியத் ஒன்றியத்தை ஆண்டு கொண்டிருந்த சமூக ஏகாதிபத்தியம் நிறுவியது. அதை சோசலிச முற்போக்கு ஆட்சி என்று இந்தியாவின் இரண்டு போலி கம்யூனிஸ்டு கட்சிகளும் ஆதரித்தன.

அப்போது சோவியத் சமூக ஏகாதிபத்தியத்துடன் இராணுவக் கூட்டிலிருந்த இந்திய அரசு, நஜிபுல்லா அரசை அங்கீகரித்து நட்புப் பாராட்டியது. பாகிஸ்தானுக்கு எராக, அந்த அரசுடன் கூட்டணி அமைத்துக் கொண்டது. அமெரிக்க-பாக். ஆயுத நிதி உதவியுடன் நஜிபுல்லா ஆட்சிக்கு எதிராக ஆப்கானில் உள்நாட்டுப் போர் மூண்ட நிலையிலும் அந்த ஆட்சிக்கு துணைநின்றது, இந்திய அரசு.

1990-களின் ஆரம்பத்தில் அங்கு உள்நாட்டுப் போர் உச்சகட்டத்தை எட்டியது. நாட்டின் பெரும் பகுதிகளை ஆங்காங்கே கை ஓங்கியிருந்த யுத்தப் பிரபுக்கள் கைப்பற்றினர். நஜிபுல்லா ஆட்சி ஆட்டம் கண்டபோது, சோவியத் சமூக ஏகாதிபத்திய இராணுவம் ஆப்கானுக்குள் புகுந்து அந்நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டது. அங்கிருந்த யுத்தப் பிரபுக்கள் கூட்டணி அமைத்து விடுதலைப் போரை நடத்தி ஆக்கிரமிப்பாளர்களுக்கு பெரும் சேதத்தை விளைவித்தனர். சோவியத் ஒன்றியமே நிலைகுலைந்தபோது அதன் ஆக்கிரமிப்பு இராணுவம் வேறு வழியின்றி விலக்கிக் கொள்ளப்பட்டது.

ஆப்கானில் யுத்தப் பிரபுக்களின் தற்காலிகக் கூட்டணி அரசு நிறுவப்பட்ட போதும், அவர்களிடையே உள்நாட்டுப் போர் நீடித்தது. தாலிபான் என்ற இசுலாமியத் தீவிரவாத இயக்கம், அமெரிக்க-பாகிஸ்தான் உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்றியது. அதுவரை ஒரு மாளிகையில் முடங்கிக் கிடந்த நஜிபுல்லா மற்றும் தற்காலிக கூட்டணி அரசுத் தலைவர்கள் குரூரமான முறையில் பொது இடங்களில் வைத்து கொல்லப்பட்டனர். ஆப்கான் போரில் இந்தியா நடுநிலை வகிக்கவோ, ஒதுங்கியிருக்கவோ இல்லை.

தாலிபான் இயக்கம் பாகிஸ்தான் ஆதரவு பெற்றது என்பதாலேயே அதற்கு எதிராக இந்திய அரசு நின்றது. தாலிபான் ஆட்சியை நீண்டநாள் அங்கீகரிக்க மறுத்தது. இதற்கெல்லாம் பழிவாங்கும் முகமாக, அப்போது இந்திய சிறையிலிருந்த பாகிஸ்தான் ஆதரவு காசுமீர் தீவிரவாத இயக்கத் தலைவரை விடுவிக்கக் கோரி இந்திய சிவில் விமானம் ஆப்கானுக்குக் கடத்தப்பட்டபோது, கடத்தல்காரர்களுக்கு உறுதுணையாக தாலிபான் அரசு செயல்பட்டது.

ஆப்கான் விடுதலைப் போருக்கு அரபுநாடுகளில் இருந்து படையும் நிதி


யும் திரட்டிய சவுதி நாட்டவர்தான் ஓசாமா பின்லேடன். அவர் நிறுவிய அல்-கொய்தாவைக் கொண்டு உலகு தழுவிய இசுலாமிய புனிதப்போர் தொடுப்பதுதான் அவரது இலட்சியம். இந்தப் புனிதப் போரில் அல்-கொய்தா வுடன் கூட்டுச் சேர்ந்த தாலிபான், அதற் கான தளமாக ஆப்கானைப் பயன்ப டுத்த உதவியது.

அமெரிக்க உதவியைப் பெற்று வளர்ந்த தாலிபான் - அல்-கொய்தா இயக்கங்கள், தமது இசுலாமியப் புனி தப் போரை அமெரிக்காவுக்கு எதிரா கவே திருப்பிவிட வேண்டி வந்தது. காரணம் பாலஸ்தீனம், ஈராக், லிபியா, சிரியா என்று அமெரிக்காவின் தலையீ டும் ஆக்கிரமிப்பும் உருட்டல் மிரட்ட லும், தடை முற்றுகையும் அரபு-இசுலா மிய நாடுகளுக்கு எதிராகப் பரவியது.

இதன் நேரடி விளைவாக அமெரிக் காவுக்கு எதிராக செப்டம்பர் 11, 2001 தாக்குதலை அல்-கொய்தா வெற்றிகர மாக நடத்தியது. அதைத் தொடர்ந்து பயங்கரவாதத்துக்கு எதிரான உலகு தழுவிய போரைப் பிரகடனப்படுத்திய அமெரிக்கா, பிரிட்டனின் துணை யோடு ஆப்கானையும் பின் ஈராக்கை யும் ஆக்கிரமித்துக் கொண்டு அவ்விரு நாடுகளிலும் பொம்மை ஆட்சிகளை நிறுவியது.

நேரு காலம் முதல் இந்தியா ஒரு கூட்டுச் சேரா நாடு என்று நாடகமாடி வந்தபோது, சோவியத் மற்றும் அமெ ரிக்க வல்லரசுகளுக்கு மாறிமாறி ஊழி யஞ்செய்து வந்திருக்கிறது. சோவியத் ஒன்றியத்தின் கலைப்புக்குப் பிறகு அமெரிக்காவின் அழையாத அடி யாளாக மாறியது. பயங்கரவாதத்துக் கெதிரான உலகப் போரை அமெரிக்கா பிரகடனப்படுத்திய போது, பயங்கர வாதம் என்றாலே இசுலாமிய பயங்கர வாதம்தான் என்ற தனது பார்வையின் படி, அதற்கு எதிரான போரில் அமெ ரிக்கா தன்னை இளைய பங்காளியாகச் சேர்த்துக் கொள்ளும் என்று நம்பி ஏமாந்தது, இந்திய அரசு.

பாகிஸ்தான், அமெரிக்காவுடன் நீண்டகால இராணுவக் கூட்டு வைத் துக் கொண்டுள்ள விசுவாசமான நாடு. மேலும் எண்ணெய் வளமிக்க இசுலா மிய - அரபு நாடுகள் மீது அமெரிக்கா ஆக்கிரமிப்புப் போர் நடத்தவும், அதே சமயம் அது பொதுவில் இசுலாமியப் பகைநாடு என்ற தோற்றம் ஏற்படாமல் தடுக்கவும் பயன்படும். அதோடு பிராந் திய மற்றும் துணை வல்லரசு பேராசை கொண்ட இந்தியாவையும், சீனா மற் றும் ரசியாவை எதிர்க்கவும் யுத்த தந்திர முக்கியத்துவம் வாய்ந்த கிழக்கு எல் லையில் உள்ளது. அமெரிக்காவின் சி.ஐ.ஏ.வுடன் கூட்டுச் சேர்ந்து உதவும் உளவுப்படை வலைப்பின்னலை இசு லாமிய - அரபு நாடுகளில் கொண் டுள்ளது. எனவே, இந்தியாவை இரண் டாம்பட்ச கூட்டாளியாக மட்டுமே ஏற் றுக் கொண்ட அமெரிக்கா பாகிஸ்தா னையே நம்பகமான முதல்நிலை அடி வருடியாக வைத்துக் கொண்டது.



ராமன்குட்டி மணியப்பனின் உடலுக்கு, காபூலில் உள்ள இந்தியத் தூதரக பாதுகாப்பு படை வீரர்கள் அளித்த அரசு மரியாதை. (உள்படம்) ராமன்குட்டி மணியப்பன்.

இருந்தாலும், அமெரிக்காவின் நல் லாசியைப் பெறுவதற்காக தொடர்ந்து அதன் மேலாதிக்க, ஆக்கிரமிப்பு நட வடிக்கைகளுக்கு உதவி வருகிறது. இந் தியா, அமெரிக்காவின் ஏவல் நாயான இசுரேலுடன் பலவகையிலும் நெருக்க மான உறவு வைத்துக் கொண்டது. அமெரிக்க நிர்பந்தத்தை ஏற்று, காசுமீர் விவகாரத்திலும் தனது பழைய நிலை யைத் தளர்த்திக் கொண்டு பாகிஸ்தானு டன் சுமுக உறவை ஏற்படுத்திக் கொள்ளத் தொடங்கியது. அமெரிக்கா, இசுரேலுடன் இராணுவ ஒப்பந்தங்க ளும், இராணுவ ஒத்திகைகளும் வைத் துக் கொண்டது. தானே அமெரிக்காவு டன் அணுசக்தி ஒப்பந்தம் போட்டுக் கொண்டபோதும், சிவில் தேவைகளுக் காக அணுசக்தியைப் பயன்படுத்தும் ஈரானின் முயற்சியை அமெரிக்காவு டன் சேர்ந்து தடுக்கும் வேலையில் ஈடு பட்டது. இதையே சாக்காக வைத்து ஈரான் மீது அமெரிக்கா ஆக்கிரமிப்புப் போர் தொடுப்பதற்கும் மறைமுகமாக உதவுகிறது.

இந்திய அரசின் இத்தகைய நடவ டிக்கைகளின் ஒரு அங்கமாக ஆப்கான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளில் ஆக்கி ரமிப்பாளர்களுக்கும், அந்நாடுகளின் துரோகக் கும்பல்களுக்கும் துணைபோ கும் செயல்களில் இந்தியா ஈடுபடுகி றது. அந்நாடுகள் மீதான ஆக்கிரமிப் புப் போர்களில் இந்தியா நேரடியாக இராணுவத்தை ஈடுபடுத்தாவிட்டா லும் மறைமுகமாக ஆக்கிரமிப்பாளர்க ளுக்கு உதவியே வந்திருக்கிறது. மன் மோகன் சிங் - நட்வர் சிங் கும்பல் பத விக்கு வந்ததும், ஈராக்கிற்கு இந்திய இராணுவத்தை அனுப்புவதற்கு எத்த ணித்தது. இங்கே கடும் எதிர்ப்புக் கிளம் பவே, முன்னாள் இராணுவத்தினரைத் திரட்டி தனியார் படை என்பதாக அனுப்பியுள்ளது.

ஆக்கிரமிப்புப் படைகளுக்கு சமை யல் பாத்திரங்கள், கழிவறைகள் கழுவு வது, முடிவெட்டுவது முதல் கண்ணி வெடிகள் அகற்றுவது, சாலைகள், ஆயு தத் தளவாடங்கள், இராணுவ வாகனங் கள் பழுது பார்ப்பது வரை போரில் ஈடு படுவதற்கான எல்லாத் தயாரிப்புக ளும் செய்து கொடுக்க இந்தியர்கள் அனுப்பப்படுகின்றனர். போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுசீர மைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகள் என்ற பெயரில் தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின் றன.

www.padippakam.com

அத்தகைய திட்டங்களில் ஒன்றாகத்தான், ஆப்கானிஸ்தான் எல்லைப்புறச் சாலைகள் அமைப்புப் பணியை இந்திய அரசு நிறுவனமான எல்லை சாலைகள் அமைப்பு நிறுவனம் ஏற்றுச் செயல்படுகிறது. உண்மையில் இது சிவிலியன் பணி கிடையாது. துணை இராணுவ அமைப்பின், போர் முக்கியத்துவம் வாய்ந்த பணி. மத்திய ஆசியாவில் முகாமிட்டுள்ள அமெரிக்க - பிரித்தானியப் படைகள் ஆப்கான் வழியாக ஈரான் மீது தாக்குதல் தொடுக்கவும், மத்திய மற்றும் மத்திய கிழக்கு ஆசிய நாடுகளின் எண்ணெய் வயல்களைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தவும் அமெரிக்காவுக்குப் பயன்படும் சாலைகளை அமைக்கும் பணி. இவ்வாறு அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கும் துரோகிகளுக்கும் துணை போவதால் இந்தியாவின் மீது ஈராக் மற்றும் ஆப்கானில் உள்ள தாலிபான், அல்-கொய்தா மற்றும் பிற இசுலாமிய தீவிரவாதிகளும் ஆத்திரம் கொண்டுள்ளனர்.

•••

**ஆ**ப்கானில், அமெரிக்க இராணுவம் நடத்திய போலித் தேர்தல்களில் அதன் எடுபிடி அமீது கர்சாய் கும்பலை இந்தியா ஆதரித்தது. வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட கர்சாயுடன் இந்திய அரசு நெருக்கமான உறவை வளர்த்துக் கொண்டது. தெற்காசியக் கூட்டமைப்பில் ஆப்கானைச் சேர்க்க முயலுகிறது. 2005-ஆம் ஆண்டுக்கான இந்திராகாந்தி அமைதி விருது அமீது கர்சாய்க்கு வழங்கிப் பாராட்டுவதாகவும் முடிவு செய்தது. இவ்வாறு ஆப்கானை ஆளும் துரோகக் கும்பலுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலம் அமெரிக்காவின் இளைய பங்காளியாகி விடலாம் என்று கணக்குப் போட்டு இந்திய அரசு வேலை செய்கிறது.

இதனால் ஆத்திரமடைந்த தாலிபான் தீவிரவாதிகள், ''எல்லா இந்தியர்களும் ஆப்கானை விட்டு வெளியேற வேண்டும்'' என்று எச்சரித்துக் கெடுவும் விதித்தனர். அதை மதியாத இந்திய அரசு மணியப்பன் கடத்திக் கொல்லப்பட்ட பிறகும், ஆப்கானில் தனது திட்டப் பணிகளுக்குப் பாதுகாப்பாக உள்ள 900 இந்திய-திபேத் எல்லைப் பாதுகாப்புப் படையினர் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

ஆக்கிரமிப்பாளர்களையும், துரோகிகளையும் ஆதரிப்பது, துணைபோவது என்ற கேடான நடைமுறையால் இந்திய அரசு மணியப்பனைப் பலி கொடுத்தது. ஆனால், பாகிஸ்தான் உளவுத்துறையும், தாலிபான் பயங்கரவாதிகளும்தான் இதற்குக் காரணம் என்று இந்திய உளவுத்துறை ஆலோசகர் ஒருபுறம் கூறுகிறார். இராணுவ அமைச்சரோ அதை மறுத்து விளக்கமளிக்கிறார். மணியப்பன் ''அமைதிக்கான படைவீரர்'', ''ஆப்கான் - இந்திய நட்புறவுக்காக உயிர்நீத்த தியாகி'' என்றெல்லாம் இந்திய அரசு புகழ்கிறது.

அவருக்கு ''கார்கில் போர் தியாகி''களுக்கு அளிக்கப்பட்ட மரியாதை - விருது வழங்கப்படுகிறது. தனி விமானத்தில் அவரது உடலைக் கொண்டு வந்து, புதுதில்லியில் இராணுவ மரியாதைகள் செய்யப்பட்டு, கேரளத்தில் அமைச்சர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள் சூழ, போலீசு குண்டு முழங்க அரசு மரியாதையுடன் எரியூட்டப்படுகிறது. 10 இலட்ச ரூபாய் உதவித் தொகை, மனைவிக்கு வேலை, குழந்தைகளுக்கு இலவசக் கல்வி என்று வாரி வழங்கி, தன் குற்றங்களை மூடி மறைக்க இந்திய அரசு எத்தணிக்கிறது.

வயது முதிர்ந்த நோயாளிகளான பெற்றோர், இளம் விதவை, சின்னஞ்சிறு குழந்தைகள் - மணியப்பன் கொலைச் செய்தியை கேட்டுக் கதறித் துடிக்கும் காட்சிகளைச் செய்தி ஊடகம் மீண்டும் மீண்டும் காட்டுகின்றது. ''பிழைப்புக்காக வேலை பார்க்கப் போன அப்பாவியை பயங்கரவாதிகள் காட்டுமிராண்டித்தனமாக கழுத்தை அறுத்துக் கொன்று விட்டார்களே!'' என்று அனுதாபமும் கோபமும் கொப்பளிக்கச் செய்கின்றது. ஆனால், மெல்ல மெல்ல உண்மை வெளிவருகிறது. இச்சம்பவத்தின் பின்னணியைப் பற்றி பலரும் அறிய வருகின்றனர். இதனால் இந்திய அரசுக்கு எதிராக எழுகிற கொந்தளிப்பு அடங்காது!

• மாணிக்கவாசகம்

# புரட்சிகரப் பண்பாட்டை உயர்த்திப் பிடித்த மணவிழா

**வி**ழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் வட்ட வி.வி.மு. தோழர் கதிர்வேலனின் மகள் **கனல்** அவர்களுக்கும் கோவையைச் சேர்ந்த **குமார் ப்ராங்க்ளின்** அவர்களுக்கும் 6.11.05 அன்று சங்கராபுரத்தில் புரட்சிகர மணவிழா நடைபெற்றது. இதர ஓட்டுக் கட்சிகள், ''அண்ணன் அவர்களின் இல்லத் திருமண விழாவுக்கு வருகை தரும் தளபதியே வருக!'' என்று சுவரொட்டி விளம்பரம் செய்து வரும் வேளையில், ''அறிவும் நாகரிகமும்மிக்க மக்கள் வெட்கித் தலைகுனியும் சாதி, மதம், சடங்குகள், வரதட்சிணை மற்றும் பெண்ணடிமைச் சின்னமான தாலி ஆகிய அனைத்தையும் ஒழித்துவிட்டு நடக்கும் இப்புரட்சிகர மணவிழாவுக்கு உழைக்கும் மக்களே, அணிதிரண்டு வருக! புதிய சமுதாயம் காண இப்புரட்சிகர திருமணத்தை ஆதரிப்பீர்!'' என்ற வாசகங்களுடன் சுவரொட்டிகள் - தட்டிகள் மூலம் வி.வி.மு. தோழர்கள் இப்பகுதியெங்கும் பிரச்சாரம் செய்து புரட்சிகரப் பண்பாட்டை உயர்த்திப் பிடிக்க அறைகூவி அழைத்தனர்.

திரளான உழைக்கும் மக்கள் பங்கேற்க, தோழர் பொன்னையன் தலைமையில் நடைபெற்ற இப்புரட்சிகர மணவிழாவில் வி.வி.மு. தோழர்களும் நண்பரும் உறவினர்களும் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் உரையாற்றிய தோழர் கதிர்வேலன், ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்புதான் புரட்சிகரத் திருமணம் செய்து கொண்டதையும், 20-க்கும் மேற்பட்ட புரட்சிகர திருமணங்களை தோழர்களுக்கு நடத்தி வைத்ததையும் பெருமையுடன் நினைவு கூர்ந்ததோடு, புரட்சிகர வாழ்வை மேற்கொள்வதில் தன்னிடம் இன்னமும் குறைகள் இருப்பதை திறந்த மனதுடன் சுயவிமர்சனமாக முன்வைத்தார். சீரழிவு - பிற்போக்கு கலாச்சாரத்துக்கு எதிராக மக்களைப் புரட்சிக்கு அணிதிரட்டி வரும் மகத்தான பணியை இடைவிடாமல் செய்து வரும் ''புதிய ஜனநாயகம்'', ''புதிய கலாச்சாரம்'' ஆகிய பத்திரிகைகளுக்கு தலா ரூ. 5000/- வீதம் மணமக்களின் சார்பில் வழங்கினார். அரங்கம் எங்கும் நிரம்பி வழிந்த மக்கள் கரவொலி எழுப்பி உற்சாகத்துடன் இதை வரவேற்று ஆதரித்தனர்.

புரட்சிகரப் பண்பாட்டைத் தொடர்ந்து உயர்த்திப் பிடித்துவரும் தோழர் கதிர்வேலன் குடும்பத்தாருக்கும் வி.வி.மு. தோழர்களுக்கும் மணமக்களுக்கும் எமது புரட்சிகர வாழ்த்துக்கள்!

- ஆசிரியர்குழு

www.padippakam.com

# தென்னமெரிக்காவை உலுக்கிய புஷ் எதிர்ப்புப் போராட்டம்

கடந்த நவம்பர் 3-4 தேதிகளில் தென்னமெரிக்காவிலுள்ள அர்ஜெண்டினா நாட்டின் மார்டெல் பிளாடா நகரில் அமெரிக்க சுதந்திர வர்த்த பகுதிகள் (FTAA) எனும் ஒப்பந்தத்தை இறுதியாக்குவதற்கான உச்சி மாநாடு நடைபெற்றது. வட-தென் அமெரிக்க கண்டத்து 34 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற இம்மாநாட்டுக்கு அமெரிக்க அதிபர் புஷ்-ஷும் வருகை தந்தார். வட-தென் அமெரிக்காவின் நாடுகளின் பொருளாதார சுயாதிபத்திய உரிமைகளை நீக்கி விட்டு, வடக்கே கனடாவிலிருந்து தெற்கே சிலி வரை சுதந்திரமாக வர்த்தகம் செய்ய ஒப்பந்தம் செய்து கொள்வது என்ற பெயரில் அமெரிக்க மேலாதிக்கவாதிகள் தென்னமெரிக்க நாடுகளை ஒட்டச் சுரண்டும் மறுகாலனியாதிக்கக் கொள்கைகளின் புதிய ஏற்பாடுதான் இது.

இம்மாநாடு நடந்த அதே நாட்களில், உலக சமூக மன்றத்தினர் (WSF) அதே மார்டெல் பிளாடா நகரில் ''மக்களின் மாற்று உச்சி மாநாடு'' என்ற பெயரில் புஷ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் - பேரணியை நடத்தினர். உலகப் புகழ் பெற்ற பிரபல கால்பந்தாட்ட வீரரான மரடோனா தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறக் கோரி போராடி வரும் ''அமைதித் தாய்'' சிண்டி ஷீஹன், ஈராக்கில் கொல்லப்பட்ட படைவீரர்களின் பெற்றோர்கள் - உறவினர்கள், வெனிசுலா அதிபர் சாவெஸ், தென்னமெரிக்க கண்டத்து நாடுகளைச் சேர்ந்த தொழிற்சங்க - விவசாய சங்கத் தலைவர்கள் என பலரும் பங்கேற்று முழங்கினர். அர்ஜெண்டினாவில் இதுவரை கண்டிராத அளவுக்கு ஏறத்தாழ 25,000 பேருக்கு மேல் திரண்டு உலக மேலாதிக்கப் போர் வெறியன் புஷ்-ஷுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தென்னமெரிக்க கண்டத்து நாடுகளின் கொடிகளை இணைத்து, அதில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளியான சேகுவேராவின் உருவப் படத்தைப் பொறித்து நீண்ட பதாகையாக நூற்றுக்கணக்கானோர் பிடித்துச் சென்ற ஊர்வலத்தின் இறுதியில், வெனிசுலா அதிபர், ''நாம் எல்லோரும் இந்நகரில் அமெரிக்க மேலாதிக்கக் கனவாகிய அமெரிக்க சுதந்திர வர்த்தகப் பகுதிகள் (FTAA) ஒப்பந்தத்தைக் குழிதோண்டிப் புதைப்போம்'' என்று சூளுரைத்தார். அமெரிக்க மேலாதிக்கவாதிகள் மீது வெஞ்சினம் கொண்ட ஆர்ப்பாட்டத்தினர் இந்நகரிலுள்ள அமெரிக்க சிட்டி வங்கி, மெக்டொனால்டு உணவு விடுதிகள் மீது கல்லெறிந்து சேதப்படுத்தினர்.




**புஷ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை தாங்கிய உலகப் புகழ் பெற்ற கால்பந்தாட்ட வீரர் மரடோனா.**

அர்ஜெண்டினா மட்டுமின்றி, பிரேசில், உருகுவே முதலான அண்டை நாடுகளிலும் புஷ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் எழுச்சியுடன் நடந்துள்ளன. தென்னமெரிக்கக் கண்டத்தில் வீசும் புஷ் எதிர்ப்புப் புயலை எதிர்கொள்ள முடியாத நிலையில், அமெரிக்க மேலாதிக்கவாதிகளின் சுதந்திர வர்த்த ஒப்பந்த மாநாடு பெருந்தோல்வியில் முடிந்தது.

ஜூலை 2005-இல் தென்னமெரிக்க கண்டத்து சமூக விஞ்ஞான கல்வித் துறையினர் அர்ஜெண்டினா, பிரேசில், உருகுவே, வெனிசுலா, பொலிவியா, பெரு ஆகிய நாடுகளில் விரிவாக நடத்திய கருத்துக் கணிப்பில் 70%-க்கும் மேலான மக்கள், புஷ்ஷின் கொள்கைகள் உலக அமைதிக்கு எதிரானது என்று கூறியுள்ளனர். தென்னமெரிக்கா மட்டுமல்ல; தனது சொந்த நாட்டிலேயே கூட அதிபர் புஷ்ஷுக்கு மக்களிடம் ஆதரவு இல்லை. கடந்த நவம்பர் 2-ஆம் நாளன்று அமெரிக்க மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்துவிட்டு, ''தற்போதைய புஷ் ஆட்சியை அகற்ற உலகம் இனியும் காத்திருக்கக் கூடாது'' என்ற முழக்கத்துடன் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். நவம்பர் 4-ஆம் தேதியன்று ''வாஷிங்டன் போஸ்ட்'' நாளேடு வெளியிட்ட கருத்துக் கணிப்பில் ஏறத்தாழ மூன்றில் இரு பங்கினர் ''புஷ்ஷின் நேர்மை சந்தேகத்திற்குரியது; அவர் உலக அமைதியைச் சீர்குலைப்பவர்'' என்று கூறியுள்ளனர். சி.பி.எஸ். என்ற செய்தி நிறுவனம் இதேபோல் அமெரிக்க மக்களிடம் கருத்து கணிப்பு நடத்தி வெளியிட்டுள்ளதோடு, 2001-இல் அதிபராக பதவியேற்ற பிறகு, இதுவரை கண்டிராத அளவுக்கு புஷ் எதிர்ப்பு வலுப்பெற்றுள்ளது என்றும் எந்தவொரு அமெரிக்க அதிபரும் இந்த அளவுக்கு வெறுப்புக்கு ஆளானதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

**தென்னமெரிக்க நாடுகளின் கொடிகளை இணைத்து, அதில் சே-குவாரா உருவம் பொறித்த பதாகையுடன் உலக சமூக மன்றம் மார்டெல் பிளாடா நகரில் நடத்திய புஷ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.**



● மனோகரன்

படிப்பகம்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 1 10, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85 Regn.No.TN/PMG(CCR)/621/03-05

# அமெரிக்காவின் போர் குற்றங்கள்: அன்று வியட்நாம்; இன்று ஈராக்!

அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈராக்கில் தினந்தோறும் நடத்திவரும் பச்சைப் படு கொலைகளும்; அதை மூடிமறைக்க ஜார்ஜ் புஷ் கும்பல் அவிழ்த்துவிடும் புளுகுணிப் பிரச்சாரமும் இட்லரையும், கோயபல்சை யும்கூட வெட்கப்பட வைத்துவிடும்.

கடந்த அக்டோபர் 16-ஆம் தேதி, ஈராக்கின் ரமாடி நகரில் அமெரிக்க இராணுவம் வான் வழித் தாக்குதலொன்றை நடத்தியது. "இத் தாக்குதலில் 75 தீவிரவாதிகள் கொல்லப் பட்டதாகவும், அந்த ஊரைச் சேர்ந்த மக்களுக் குச் சிறுகாயம் கூட ஏற்படவில்லை" என்றும் அமெரிக்கா தனது எடுபிடி பத்திரிகைகள் மூலம் பிரச்சாரம் செய்தது.

அன்று அமெரிக்கா நடத்திய விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட தீவிரவாதி களுள் 6 வயதான முகம்மது சாலிக் அலியும்; நான்கு வயதான சாட் அகமதுவும்; எட்டு வயதான ஹைஃபாவும் அடக்கம் என்பது ஈராக்கியர்களுக்கு மட்டுமே தெரிந்த உண்மை.

அன்று, அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்க் கும் போராளிகள், ரமாடி நகரில் ஒரு அமெ ரிக்க இராணுவக் கவச வண்டியைக் குண்டு வீசித் தகர்த்து, ஐந்து அமெரிக்க சிப்பாய் களைக் கொன்றனர். குண்டு வீச்சில் சிதைந்து போன அந்த வண்டிக்கு அருகே இந்தக் குழந் தைகள் விளையாடிக் கொண்டிருந்த பொழுது தான், அமெரிக்கா இராணுவம் விமானத் தாக் குதல் நடத்தியது. குண்டு வீச்சுக்குப் பலி யான இந்தக் குழந்தைகளும், அப்பாவி பொது மக்களும்தான் "தீவிரவாதிகளாக" அறிவிக் கப்பட்டனர்.

அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் போராளிகளைப் பிடிப்பதற்கு, அவர்கள் வீட்டுப் பெண்களைப் பிணைய கைதிகளாகக் கடத்திக் கொண்டு போகும் கீழ்த்தரமான "தாதா" வேலையை, அமெரிக்க இராணுவம் ஈராக்கில் மதிப்புமிக்க தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையாக்கி விட்டது.



பக்பா நகருக்குச் சென்று கொண்டிருந்த ஒரு குடும்பத்தின் மீது அமெரிக்க இராணுவம் நடத்திய துப்பாக்கி சூட்டில் பலியான பச்சிளம் குழந்தை.

அமெரிக்க இராணுவம் ஒரு ஈராக்கியரைக் கைது செய்ய, அவர் போராளியாக இருக்க வேண்டிய அவசியமே இல்லை. "எதிர்காலத் தில் போராளியாக மாறுவார்", "எதிர்காலத் தில் தற்கொலைப் படை மனித வெடிகுண்டாக மாறுவார்" என்று 'கண்டுபிடித்து', அமெரிக்க இராணுவத்தால் கை காட்டப்படுபவர்கள் அனைவரும் கைது செய்யப்படு கின்றனர். இப்படிப்பட்ட கற்பனையான குற்றச்சாட்டின் கீழ் மட்டும் 122 பெண்கள் சிறையில் எவ்வித விசாரணை யும் இன்றி அடைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்த வியட்நாம் மக்கள் மீது "ஏஜெண்ட் ஆரஞ்சு" என்ற இரசாயன ஆயுதம் வீசப் பட்டது போல, ஈராக்கில் பலூஜா நகரைப் போராளிகளின் பிடியில் இருந்து கைப்பற்ற, அமெரிக்கா நடத்திய சண்டை யின் பொழுது, வெள்ளை பாஸ்பரஸ் என்ற தடை செய்யப் பட்ட இரசாயன ஆயுதம் அந்நகரின் மீது வீசப்பட்டது. மேலும், அச்சண்டையில் காற்றில் இருந்து ஆக்ஸிஜனை உறிஞ்சுவதன் மூலம், எதிரிகளை மூச்சுத் திணற வைத்துக் கொல்லும் இரசாயன ஆயுதங்களையும் அமெரிக்க இராணு வம் பயன்படுத்தியிருக்கிறது.

பலூஜா நகர் மீது இரசாயனக் குண்டுகள் வீசப்பட்ட பொழுது, ஏறத்தாழ 50,000 பொது மக்கள் அந்நகரில் இருந் தனர். இவர்களுள் எத்தனை ஆயிரம் பேர் உடனடியாக இறந்து போனார்கள்? எத்தனை பேர் எதிர்காலத்தில் சிறுகச் சிறுக உடல் நலம் பாதிக்கப்பட்டு இறந்து போவார்கள் என்பது மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. இந்தப் படுகொலை பற்றி பத்திரிகை நிருபர்கள் கேட்டதற்கு, அமெரிக்க இராணுவ மந்திரி டொனால்டு ரம்ஸ்ஃபெல்டு, "நாங்கள் பிணங்களை எண்ணுவதில்லை" எனத் திமிரா கப் பதில் அளித்தார்.

இந்த அத்துமீறல்களை, மனித உரிமை மீறல்களை, நாகரிக உலகம் போர் குற்றங்கள் என்கிறது. ஆனால், ஜார்ஜ் புஷ்ஷும், மன்மோகன் சிங் போன்ற அவரது எடுபிடிகளும் இந்த போர் குற்றங்களைத் தான் 'ஜனநாயகம்' என்கிறார் கள்!